Regstered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

யாழ் நகரில் புதிதாகத் தனது சேவையை
ஆரம்பித்து, விஸ்தரித்து வருகின்றது.
முற்றிலும் இரும்பு உருக்கிலான
(Steel) தளபாடங்கள், உபகரணங்கள்.
உறுதியான வடிவத்திலும்,
உத்தரவாதத்துடனும் நீங்கள்
விரும்பியவாறு செய்து பெற்றுக்கொள்ளவும்.
சகலவித வெல்டிங் வேலைகளுக்கும்,
KKJ
Work Shop & Sales Centre
No. 11, ஐந்துசந்தி, யாழ்ப்பாணம். T.P:- 0777903720з

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 புரட்டாதி- 13 ஹிஜ்ரி 1428 சஃபான் 24 (29.09.2005) வியாழக்கிழமை இதழ்:364

# மன்னாரில் வரலாறு காணாத பேரெழுச்சி;

# 50,000 பேர் திரண்டு உரிமை பிரகடனம்!



(மன்னாரிலிருந்து தீபன்)

தமிழர் தாயகத்தை சர்வதேசமே அங்கீகரி எனக் கோரி மன்னாரில் நேற்று இடம்பெற்ற பிரமாண்டமான தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஒன்று கூடி உரிமைப் பிரகடனம் செய்தனர்.

வவுனியாவில் நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட தமிழீழ தேசிய பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் மாவட்ட ரீதியாக நடத்தப்படும் ஐந்தாவது எழுச்சி நிகழ்வு நேற்றுமாலை மன்னார் பொது விளையாட்டரங்கில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தடையை மீறி ஏறிய கொடி!

மன்னார்

மன்னாரில் நேற்று தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வில் படை யினர் விதித்த தடையையும் மீறி தமிழீழ தேசியக் கொடி ஏற்றப் பட்டது.



## குழப்ப முயன்ற படையினர்!

மன்னார்

மன்னாரில் தமிழ் தேசிய எழுச் சிப் பிரகடன நிகழ்வில் பொதுமக்கள் பெருமளவில் கலந்துகொள்வதைத்

## நாளை பொங்கு தமிழ்!

யாழ்ப்பாணம்

தற்போது நடைமுறையிலுள்ள தமிழர் அரசாங்கத்தை சர்வ தேச சமூகம் அங்கீகரிக்கவேண்டும் எனக்கோரி நாளை நடை பெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வுக்கான சகல ஏற்பாடுகளும்

வில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஒன்று | யில் மாவட்ட ரீதியாக நடத்தப்படும் ஐந்தாவது | ஆகிய மாவட்டங்களில்(12 ஆம் பக்கம் பார்க்க)

## தடையை மீறி ஏறிய கொடி!

மன்னார்

மன்னாரில் நேற்று தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வில் படை யினர் விதித்த தடையையும் மீறி தமிழீழ தேசியக் கொடி ஏற்றப் பட்டது.

தேசிய எழுச்சி நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடி ஏற்றக்கூடாது எனத் தெரிவித்து - நிகழ்வு நடைபெறவிருந்த மைதானத்தைச் சுற்றி பெருந்தொகையான படையினரைக் குவித்து படைத் தரப்பு அச்சுறுத்தியது.

ஆயினும் நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றுவதில் விடாப்பிடியாக நின்றதால் படையினர் எதுவும் செய்யமுடியாதநிலை ஏற்பட்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## குழப்ப முயன்ற படையினர்!

மன்னார்

மன்னாரில் தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வில் பொதுமக்கள் பெருமளவில் கலந்துகொள்வதைத் தடுக்கும் வகையில் - படையினர் மோசமான அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

மன்னாரில் தேசிய எழுச்சி நிகழ்வைச் சீர்குலைக்கும் நோக்கத்துடன் நேற்றுக் காலை படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டனர்.

இதனால் தேசிய எழுச்சி நிகழ்வுக்காக களைகட்டியிருந்த மன்னார் வீதிகளில் நேற்று காலை முதல் பதற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை பொங்கு தமிழ்!

யாழ்ப்பாணம்

தற்போது நடைமுறையிலுள்ள தமிழர் அரசாங்கத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவேண்டும் எனக்கோரி நாளை நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வுக்கான சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்திருப்பதாக -யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

நாளை மாலை 3 மணிக்கு பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ள இந்தப் பொங்கு தமிழ் நிகழ்வுக்கு அனைத்து தமிழ் மக்களும் அணிதிரண்டு தமிழ் மக்களின் உரிமைக்குரலை சர்வதேச சமூகத்துக்கு உரத்த குரலில் முழக்கமிட ஒன்றிணையுமாறு பல்கலைக்கழக சமூகமும், குடாநாட்டிலுள்ள பொது அமைப்புகளும், கல்வியியலாளர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அழைப்பு விடுத்துள்ளனர்.

சர்வதேச சமூகம் எமது உரிமைப் போராட்டத்தை அங்கீகரிப்பதன் மூலம் மீண்டும் நாட்டில் யுத்தம் ஏற்படுவதையும், எமது உரிமைகள் உயிர்களுக்கு இழப்புக்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)



# ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவால் சமாதான முயற்சிக்கு பின்னடைவு!

## விடுதலைப் புலிகள் கண்டனம்

கிளிநொச்சி

தமக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் எடுத்திருக்கும் ஒரு தலைப்பட்சமான முடிவு, சமாதான முயற்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக அமையும் எனத் தெரிவித்துள்ள விடுதலைப் புலிகள் -

சர்வதேச சமூகம் தொடர்ந்தும் இத்தகைய முடிவுகளை மேற்கொண்டால் தாமும் இக்கட்டான நிலையில் துர்ப்பாக்கியமான முடிவுகளை எடுக்க நேரிடும் எனத் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவு குறித்து தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று கிளிநொச்சியில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போது -

ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை தமிழ்மக்களுக்கும் எங்களுக்கும் அதிர்ச்சி தரும் விடயமாகத்தான் இருக்கிறது.

கடந்த காலங்களில் தமிழர் உரிமைப் போராட்டம் தொடர்பாகவோ, தமிழர்கள் மீதான மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவோ சர்வதேச சமூகத்துக்கு உண்மை நிலைகள் தெரியக்கூடாது என்பதற்காக பத்திரிகைத் தணிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டது. இதற்காக வெளிநாட்டவர்களோ, செய்தியாளர்களோ வருவதற்குத் தடையும் விதித்திருந்தது.

அதுபோன்ற சூழ்நிலையை தற்போதும் உருவாக்குவதுதான் அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கிறது.

(02 ஆம் பக்கம் பார்க்க)

# ஐரோப்பிய ஒன்றியத்தின்...

ஏனெனில், இங்குள்ள உண்மை நிலைகளை உலகுக்குச் செல்லவிடாமல் தடுப்பதற்கான பல இராஜதந்திர பிரசார நடவடிக்கைகளை அண்மைக் காலமாக இலங்கை அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

குறிப்பாக பேச்சுவார்த்தைகள் உள்ளிட்ட சமாதான நடவடிக்கைகளை முடக்கி இங்குள்ள உண்மை நிலைகளை மூடிமறைத்து, எமது உரிமைப்போராட்டம் மற்றும் அரசியல் முன்னெடுப்புக்கள் தொடர்பாக சர்வதேச சமூகத்துக்கு தவறான புரிந்துணர்வை உருவாக்குவதில் அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நடவடிக்கையாக ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை வெளிவந்திருக்கிறது.

போர்நிறுத்த காலப் பகுதியில் எமது போராளிகள், ஆதரவாளர்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டுள்ளனர். இந்தப் படுகொலைகளுக்கு இராணுவத்தினர்தான் முழுப் பொறுப்பு. இப்படி அரச பயங்கரவாதத்தை பெருமளவிற்கு கட்டவிழ்த்து விட்ட இலங்கை அரசுக்கு எவ்வித கண்டனத்தையும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிக்கவில்லை.

இது அரசாங்கத்தின் அரச பயங்கரவாதச் செயல்களை நியாயப்படுத்துவதாகும்.

எங்களைப் பொறுத்தவரையில் இப்படியான நடவடிக்கைகள் சமாதான நடவடிக்கைகளுக்கு ஒரு பின்னடைவைத் தரும். ஏனெனில், சர்வதேச சமூகத்தினது நேர்மையான, உண்மையான ஈடுபாடுதான் தமிழ் மக்களை இந்த சமாதான முன்னெடுப்புக்களில் நம்பிக்கைகொள்ள வைத்தது.

நடுநிலைமை, நீதி ஆகியவற்றின் அடிப்படையில்தான் இந்த சமாதான முன்னெடுப்புக்கள் வெற்றிபெறும்.

அதைவிடுத்து ஒருதலைப்பட்சமான, ஒரு பக்கச்சார்பான நிலைப்பாடுகள் சமாதான முன்னெடுப்புக்களை பலவீனப்படுத்தும். ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவானது தமிழ்மக்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சமாதான முன்னெடுப்புக்களின் மீது நம்பிக்கையீனத்தைத் தான் உருவாக்கும்.

,அதே நேரத்தில் இந்த முடிவால் உடனடிப் பாதிப்புக்கள் ஏதும் ஏற்படாது.

இந்த சமாதான காலத்தில்தான் சர்வதேச சமூகத்திற்கு எமது தாயக உண்மை நிலைகளை வெளிப்படுத்தும் வாய்ப்பு எமது குழுக்களுக்குக் கிடைத்தது. இது சமாதான முன்னெடுப்புக்கள் மீது எம்மக்கள் மத்தியில் உற்சாகத்தையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தியது.

இந்த சமாதான முன்னெடுப்பில் பங்கேற்றுள்ள இரு தரப்பினரது நியாயங்களையும் சர்வதேச சமூகம் கேட்டுக்கொண்டதால் இந்த சமாதான முன்னெடுப்புகள் நியாயமானவை என்று எம் மக்கள் எண்ணினர்.

சமாதான முன்னெடுப்புக்களை வரவேற்றனர். ஆனால், இப்போது ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள இந்த அறிக்கையை ஒரு பக்கச்சார்பானதாகத்தான் தமிழ் மக்கள் கருதுகிறார்கள்.

சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக் காலத்தில்தான் தமிழ் மக்கள் பேரழிவுக்குள்ளாகினர். ஜனாதிபதி சந்திரிகாவின் அலங்கார வார்த்தைகளும், பேச்சுக்களும் ஒவ்வொரு நிலைமையிலும் முரண்பாடானதாகவே இருந்து இருக்கிறது. அவரது பேச்சை, அறிக்கையை நம்பிக்கொண்டு சர்வதேச சமூகம் ஒரு முடிவை மேற்கொள்ளுமேயானால் அது ஒரு பாரிய தவறிழைக்கப்படுவதாகவே கருத வேண்டியிருக்கும்.

சந்திரிகாவின் பேச்சின் அடிப்படையில் சர்வதேச சமூகம் முடிவெடுத்தால் நீதியான, நேர்மையான சமாதான முன்னெடுப்புக்கள் கேள்விக்குறியாகத்தான் இருக்கும்.

சர்வதேச சமூகத்துடன் தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பு கொள்வதைத் தடுப்பதில் அண்மைக்காலமாக அரசாங்கம் அதீத முயற்சிகளை மேற்கொண்டுவந்தது.

அமைதிப் பேச்சுக்கள் சர்வதேச அரங்கில் நடைபெறக்கூடாது என்றும், சர்வதேச இராஜதந்திரிகள் தமிழீழ பகுதிக்குச் செல்லக்கூடாது என்றும், பல இடையூறுகளை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்தியது.

அதேநேரத்தில், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான பிரசாரத்தை சர்வதேச அரங்கில் மிகத் தீவிரமாக அரசாங்கம் முடுக்கிவிட்டிருந்தது. இப்படி சர்வதேச சமூகத்திற்கு ஒரு தரப்புக் கருத்துக்கள் சென்றதன் அடிப்படையில் இந்த அறிக்கை வந்துள்ளது.

இலங்கை இனப்பிரச்சினையில் சமதரப்பு என்ற வகையில் தமிழ் மக்களின் கருத்துக்களையும் அறிந்து நீதியான முடிவை மேற்கொள்ள வேண்டும் என்று சர்வதேச சமூகத்துக்கு நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம்.

குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம் இதைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை தற்காலிக நடவடிக்கை என்றுதான் கூறி இருக்கிறார்கள். ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் நேரடியாக இங்கு வந்து கள நிலைமைகளைப் பார்வையிட்டு, தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி முடிவெடுக்க வேண்டும்.

சுனாமிக்குப் பின்னர் தமிழ் மக்களது எழுச்சி, தமிழ் மக்களின் நிர்வாகக் கட்டமைப்பின் வலு சர்வதேச அரங்கில் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

பாரிய பேரழிவுக்குள்ளான தமிழ் மக்கள் தங்களுக்கான கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை மீட்டு, ஒரு நடைமுறை அரசை உருவாக்கி, மிகச் சிறப்பான முறையில் மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்று சர்வதேச சமூகத்துக்கு தெரியவந்தது.

தமிழ் மக்கள் மீதான இப்படியான சர்வதேச சமூகத்தின் எண்ணத்தைத் தகர்க்க, குலைக்க அண்மைக் காலமாக இலங்கை அரசாங்கம் தீவிரமான பிரசாரத்தை மேற்கொண்டு வந்தது.

தமிழ் மக்களின் இந்த உயர் நிலை வளர்ச்சியை பலவீனப்படுத்த இலங்கை அரசு மேற்கொண்ட முயற்சியின் வெளிப்பாடுதான் இந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டதன் எதிரொலியாகத்தான் இந்த அறிக்கை வெளியாகிஉள்ளது.

அந்தப் படுகொலைக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று நாம் பலமுறை விளக்கியுள்ளோம்.

லக்ஸ்மன் கதிர்காமர் கொலையையும் சேர்த்து தனது பொய்ப்பிரசாரத்தை அரசு அண்மைக்காலத்தில் தீவிரப்படுத்தியது.

யுத்த நிறுத்த காலத்தில் தமிழ் மக்களும், எங்களது போராளிகளும், முக்கிய பொறுப்பாளர்களும் கொல்லப்பட்டனர். அந்த சமயத்தில் இந்த ஆட்கொலைகளை விரைந்து தடுத்து நிறுத்துமாறும் முடிவுக்கு கொண்டு வருமாறும் சர்வதேச சமூகத்திற்கு வேண்டுகோள் விடுத்தோம். ஆனால் இலங்கை அரசு உதாசீனமாக இருந்ததால், கவனமெடுக்காததால் இந்த கொலைச் செயல்கள் இப்போது அரச பகுதிக்குள்ளும் நடைபெறும் வகையில் தீவிரமடைந்துள்ளது.

கதிர்காமர் கொலையைப் பயன்படுத்தி தமிழர் உரிமைப் போராட்டத்தை, சர்வதேச சமூகத்தில் தனிமைப்படுத்தவும் ஓரங்கட்டவும் முனைகிறார்கள்.

இதற்கு சர்வதேச சமூகம் நிச்சயமாக உடன்படக்கூடாது. அது இலங்கைத் தீவில் பாரிய நெருக்கடியை உருவாக்கும்

கடந்த காலத்தில் தமிழ் மக்கள் பாரிய இனப்படுகொலைகளுக்குள்ளான போது, பாரிய மனித உரிமை மீறல்கள் திணிக்கப்பட்ட போது வாழ்வியல் பிரச்சினைகளையும், பெரும் படைபலத்தையும் எதிர்கொண்ட காலத்தில் அரசாங்கம் சர்வதேச சமூகத்துக்கு ஒரு தவறான புரிந்துணர்வையே ஏற்படுத்தி வந்தது.

அதை உலகமும் நம்பிக்கொண்டிருந்தது அதைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ் மக்கள் மீதான அ[illegible]க்கு முறைகளையும், இனப்படுகொலைகளையும் அரசாங்கம் தீவிரப்படுத்தியது.

அதே போல் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மனிதாபிமான நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்கும் தமிழர்களுக்கு எதுவிதமான மீளமைப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளை அரசாங்கம் செய்யவில்லை.

அது மட்டுமின்றி உலக சமூகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய இயற்கைப் பேரழிவான சுனாமிக்கு பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்தனர். மனிதாபிமான உதவிகளை எதிர்நோக்கி இருந்தனர்.

அந்தச் சூழலில் சர்வதேச சமூகத்தால் பரிந்துரைக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பையே நிராகரித்தது சிங்களப் பேரினவாதம். அப்படியான இலங்கை அரசுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில்தான் இந்த அறிக்கை வெளியாகி இருக்கிறது.

தற்போது தென்னிலங்கையில் மீண்டும் சிங்கள இனவாதம் தீவிரமடைந்துள்ளது. சமாதான முன்னெடுப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அவர்களது நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

இந்த நிலையில் சர்வதேச சமூகமும் ஒருபக்கச் சார்பான தோற்றத்தை அளிக்கும் அறிக்கையை வெளியிட்டிருப்பது இனவாதிகளுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளிக்கும். தமிழ் மக்கள் மீது இனப்படுகொலைகளையும் அடக்குமுறைகளையும் ஏவிவிட ஊக்கமளிப்பதாகவே இந்த அறிக்கை அமையும்.

தற்போது சிங்களப் பேரினவாதம் தீவிரமடைந்து, முன்னைய பயங்கர நிலைமைகள் உருவாகி வரும் சூழலில், அரச தரப்பின் பிரசாரத்தை மட்டும் நம்பிக்கொண்டு சர்வதேச சமூகம் முடிவு மேற்கொண்டிருப்பது தமிழ் மக்களுக்கு கவலைதரும்விடயம்.

இருந்தாலும் இது தற்காலிகமாகத் தான் இருக்கும். தமிழ் மக்களுடைய உணர்வுகளை புரிந்துகொண்டு சர்வதேச சமூகம் நீதியான நிலைப்பாட்டை மேற்கொள்ளும் என்று நம்புகிறோம்.

ஐரோப்பிய ஒன்றியம் உத்தியோக பூர்வமாக எங்களுக்கு இம்முடிவை அனுப்பவில்லை. ஊடகங்கள் வாயிலாகத்தான் அறிந்தோம்.

அண்மையில் நியூயோர்க்கில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமை நாடுகளின் கூட்டறிக்கையில் இருதரப்பினரிடமும் தாங்களது நிலைப்பாடுகளைத் தெரிவித்துஉள்ளனர்.

ஆனால் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டு இருக்கும் இந்த அறிக்கை அதிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. தமிழீழ விடுதலைப்புலிகள் மீது மட்டுமே குற்றம் கூறிஅழுத்தம் தரும் வகையில் ஐரோப்பிய ஒன்றிய அறிக்கை உள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகளை விரைவில் சந்தித்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பனையில் இருந்து தவறி வீழ்ந்து மரணம்

யாழ்ப்பாணம் —

ஓலை வெட்டுவதற்காக பனையில் ஏறிய குடும்பஸ்தர் தவறி வீழ்ந்து பரிதாப கரமாக உயிரிழந்தார்.

கோப்பாய் மத்தியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இதேஇடத்தைச் சேர்ந்த முருகையா விஜயரட்ணம் (வயது 46) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் நேற்றுக் காலை பனை மரத்தில் ஓலை வெட்டிக் கொண்டிருந்தவேளை எதிர்பாராத விதமாக தவறி வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் உடனடியாக அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட போது சில மணிநேரத்தின் பின்னர் உயிரிழந்தார். சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

நிறைஞ்சனாஸ் சங்கானை
விக்ரம்,சதா, விவேக் மற்றும் பலர்நடித்த
அந்நியன்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு)
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த
தொட்டி ஜெயா
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
சிறிகாந்த்,சோனியாஅகர்வால், மற்றும் பலர் நடித்த
ஒரு நாள் ஒரு கனவு
30 ஆம் திகதி முதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடான ஜெயம் ரவி நடித்த
மழை
காட்சிகள்:- 11.00,3.00, 7.00,10.00 (பழைய நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இன்று முதல்-
சரத்குமார், வைகைப் புயல் வடிவேலு, நமீதா நடித்த
சாணக்யா
காட்சிகள் : 2.30, 6.30, 9.30 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
இன்று முதல்-
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சூர்யா, அஸின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த
கஜினி

ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30


டிஜிற்றல் போட்டோ கொப்பி
$A_4$ - கறுப்பு வெள்ளை - 3.00 ரூபா
$A_4$ - கலர் - 40.00 ரூபா
ஸ்ரீர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சு/4609)

# எரிகாயமடைந்த யுவதி வைத்தியசாலையில் மரணம்

யாழ்ப்பாணம் —

தீக்காயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட யுவதி சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் பெறப்பதி வீதியை சேர்ந்த சிறிதாஸ் நிரோசனா (வயது 17) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த 22 ஆம் திகதி தீக்காயங்களுடன் இவரும், இவரது சகோதரியான சிறிதாஸ் சோபனாவும்(வயது 19) அனுமதிக்கப்பட்டனர்.

சிகிச்சை பலனளிக்காத நிலையில் நிரோசனா என்ற யுவதி உயிரிழந்தார். உயிரிழந்தவரின் சடலம் விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினருக்கு

யாழ்ப்பாணம் —

மருத்துவ பீட மைதானத்தில் நாளை இடம்பெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்து கொள்ளும் மக்களுக்கு முதலுதவி சேவையை வழங்க சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதில் பங்குபற்றி சேவையாற்ற விரும்பும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை அங்கத்தவர்கள் அன்று காலை 10.30 மணிக்கு நோயாளர் பராமரிப்பு சேவைக் காரியாலயத்தில் ஒன்று கூடுமாறு உதவி மாவட்ட ஆணையாளர் ஆர்.அசோகர் கேட்டுள்ளார். (111)

# இசை, நடன பட்டதாரிகள் போராட்டத்தை கைவிட்டனர்

யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீட இசை, நடன டிப்ளோமா பட்டதாரிகள் தமக்கு ஆசிரிய நியமனம் வழங்கக் கோரி யாழ்.கல்வி வலயப் பணிமனை முன்பாக கடந்த 7 தினங்கள் நடத்திய மறியற் போராட்டத்தை நேற்று பிற்பகல் 2 மணியுடன் இடை நிறுத்தினர்.

கடந்த 22 ஆம் திகதி மறியற் போராட்டத்தில் ஈடுபட்ட இசை, நடன டிப்ளோமா பட்டதாரிகளுடன் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் பஞ்சலிங்கம் தொடர்புகொண்டு பட்டதாரிகளுடைய போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியதுடன் இது தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி முடிவுகளைப் பெற்றுத் தருவதாகவும் 5 ஆம் திகதிவரை போராட்டத்தை இடைநிறுத்துமாறும் கேட்டுக் கொண்ட போதிலும் போராட்டத்தை இடைநிறுத்தாது தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர்.

தமிழ் ஆசிரியர்சங்க பொது செயலாளர் மகாசிவம், வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் ஆகியோர் இசை, நடன பட்டதாரிகள் சார்பான பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடிய போது - பட்டதாரி பயிலுநர்களை ஆசிரிய சேவையில் உள்வாங்கும் போது இசை, நடன பட்டதாரிகளும் உள்வாங்கப்படுவர் என உறுதியளித்ததையடுத்து போராட்டத்தை கைவிட்டதாக இசை, நடன டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

Active Theatre Movement

WALK IN INTERVIEW.

Post of field officer for psychosocial programme (02)

**Qualifications:** G.C.E (A/L) Qualified
Experience in social services and cultural activities.
Applicants should have valid motor bike license.

**Age limit** : 22- 35 yrs
**Salary** : Negotiable

Post of finance Assistant

**Qualifications:** G.C.E (A/L) Qualified in Commerce.
Minimum credit passes in accountancy

**Age limit** : 18- 30 yrs
**Salary** : Negotiable

Interested candidates, who possess the specified qualifications and work experience, please should be present to the office directly at 3 – 5 pm within 5days.

**Active Theatre Movement**
**"Arulaham", Adiyapatham Rd,**
**Thirunelvely.**

## ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை

# இரகசிய பொலிஸ் விசாரணை முறையற்றதென்கிறார் மஹிந்த!



கொழும்பு —
ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை வங்கிக்கணக்கு தொடர்பாக இரகசிய பொலிஸார் மேற்கொண்ட விசாரணை முறையற்றதெனவும், இதனால் தனது அடிப்படை மனித உரிமை மீறப்பட்டதாகவும் தெரிவித்து பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவுக்கு எதிராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உயர்நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட விசாரணை எழுந்தமானதும், எவ்வித காரணங்களுமில்லாததுமாகும். இந்த வங்கி கணக்கு தொடர்பாக நான் குற்றமற்றவன். குற்றத் தடுப்புப் பிரிவினரால் எனது அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளது.

விசாரணை மூலம் இந்த விடயங்கள் ஊடகங்களில் பெரிய விடயங்களாக வந்துள்ளன. இது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒருவரான எனது நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது என பிரதமர் மஹிந்த தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை வங்கிக் கணக்கில் தொடர்புடையவர் எனத் தெரிவித்து ஊடகங்களில் வெளியான செய்தியை மேற்கோள் காட்டிய குற்றத்தடுப்பு பிரிவு, பிரதமரின் பெயர் 'பி' பிரிவு அறிக்கையில் உள்ளதாக நீதிமன்றில் முன்னர் அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

எனினும், இந்த விடயத்தில் பிரதமர் ஈடுபடவில்லையென அவரது செயலாளர் லலித் வீரதுங்க பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவிற்கு முன்னர் தகவல் வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# 400 இலங்கை பொலிஸாருக்கு இந்தியாவில் விசேட பயிற்சி!

கொழும்பு —
இலங்கைப் பொலிஸாருக்கு 4 லட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர் செலவில் இந்திய அரசு பயிற்சிகளை அளிக்கவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை அரசாங்க தகவல்துறை அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் - இந்தியா, இலங்கை இரு தரப்பு நல்லுறவின் அடிப்படையில் சட்டம், ஒழுங்கை செயற்படுத்துவது தொடர்பாக 400 பொலிஸாருக்கு இந்திய நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் தரத்திலான அதிகாரிகள் 385 பேர் இந்தப் பயிற்சியில் பங்கேற்கின்றனர்.

இணையக் குற்றங்கள், வங்கி முறைகேடுகள் உள்ளிட்ட விஞ்ஞானபூர்வமான குற்றங்களைத் தடுப்பது தொடர்பாக இலங்கைப் பொலிஸாருக்கு பயிற்சிகள் அளிக்கப்படும்.

பொலிஸ் மோப்பநாய்களை கையாள்தல் தொடர்பான பயிற்சியும் அளிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிகளுக்கான செலவுத் தொகையாக இந்திய அரசு 20 மில்லியன் ரூபாவை (450000 அமெரிக்க டொலர்) ஒதுக்கீடு செய்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் கொழும்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் மற்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சராக இருந்து சுட்டுக் கொல்லப்பட்ட கதிர்காமர் ஆகியோர் தலைமையிலான இருதரப்பு கூட்டுக்குழுவின் முடிவுகளையடுத்து இந்தப் பயிற்சித் திட்டம் செயற்படுத்தப்படுகிறது என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடெங்கும் தீவிரமடைந்துவரும் தமிழ் மக்கள் மீதான கெடுபிடிகள்

## பலர் படையினரால் கைது

கொழும்பு —
நாட்டின் பல்வேறு பகுதிகளில் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதல் மற்றும் பிற நடவடிக்கைகளில் பலர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதன்படி கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 11 மணிவரை இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது 12 ஆண்களும், பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டனர். குறித்த பெண் வவுனியா பஸ்ஸில் மற்றொரு பெண்ணுடன் பயணம் செய்து கொண்டிருந்த வேளை கைதுசெய்யப்பட்டார். இவரது பெயர் மலர்விழி (வயது 25 ) என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளவத்தைப் பகுதியில் முச்சக்கர வண்டியில் பயணம் செய்த யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பகுதிகளைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 7.45 மணியளவில் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து புலிகளின் இரு பாஸ்கள், புலிகளின் தலைவர் பிரபாகரனின் படம், இரு மொபைல் போன்கள் கைப்பற்றப்பட்டன.

மற்றொரு சம்பவத்தில் கொகுவல பகுதியில் ஜீப் வண்டியில் சென்ற இளைஞரொருவர் படையினரால் கைதுசெய்யப்பட்டார். இவர்பெயர் தாமோதரம்பிள்ளை கருணாகரன் எனவும், இவர் மேலதிக விசாரணைகளுக்காக கொகுவல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# ஒற்றையாட்சி அடிப்படையிலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு!

## அடித்துக் கூறுகிறார் மஹிந்த

கொழும்பு —
முன்னைய ஆட்சியாளர்கள் சிறு சிறு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டதன் மூலம் நாட்டின் இறைமைக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளது. நாட்டை கூறுபோடாது இறைமைக்கும் பங்கம் ஏற்படுத்தியுள்ளனர். இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணவேண்டும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கம்பளை நகரில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று எமது நாட்டின் அபிவிருத்திக்குப் பெரும் முட்டுக்கட்டையாகவுள்ள போருக்கு நிரந்தரத் தீர்வினை ஏற்படுத்தி, பொருளாதார வளர்ச்சியைக் கட்டியெழுப்பவேண்டியுள்ளது. இந்த நிலைப்பாட்டை அனைவரும் உணர்ந்து கொண்டுள்ளனர். இன்று நாடு போர், பொருளாதார சுமை ஆகிய இரண்டிற்கு முகம் கொடுத்துள்ளது.

போருக்கு நிரந்தர தீர்வைக் காண்பதன் மூலம் தேசிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியும். அதற்காக ஒரு போதும் நாட்டைப் பிளவுபடுத்த அனுமதிக்க முடியாது. இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்று மிக அவசியமே.

அந்தத் தீர்வு ஒற்றையாட்சி முறையின் அடிப்படையிலேயே கொண்டு வரப்படவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நோர்வேயின் அனுசரணையில் மஹிந்தவின் நிலைப்பாடு என்ன?

## கேள்வி எழுப்புகிறது ஐ.தே.க

கொழும்பு —
இலங்கை இனப்பிரச்சினையில் நோர்வே அனுசரணையாளர்களாக செயற்படுவது தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடு என்ன என்பது தெளிவுபடுத்தப்படவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்சன் பெர்னாண்டோ இது குறித்து தெரிவிக்கையில் -

ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் தலைவராக உள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வே அனுசரணைப் பணிகள் தொடரும் என்று கூறிவருகிறார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு, சட்டம், ஒழுங்கு, வேலைவாய்ப்பின்மை, வாழ்க்கைச் செலவீனம், சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரண உதவிகள், ஆகியவற்றில் தனது நிலைப்பாடு எது என்பதை பொதுமக்களிடம் மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படையாக விளக்கவேண்டும்.

தன்னுடைய 30 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில் இந்த நாட்டு மக்களுக்காக மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்றிய முக்கியமான திட்டங்கள் ஏதும் உண்டா? 30 ஆண்டுகள் எவ்வித செயற்திட்டத்தையும் முன்னெடுக்காத மஹிந்த ராஜபக்ஷ அடுத்த 6 ஆண்டுகளிலா நாட்டைக் காப்பாற்றுவார்?


நாட்டில் ஜனநாயகத்தை மீளக் கொண்டுவருவதற்கும், சட்டம், ஒழுங்கை மேம்படுத்தவும் ஒரு வலிமைமிக்க தலைமை தேவை. அந்த மாற்று தலைமையை ஐக்கிய தேசியக் கட்சியால் மட்டுமே அளிக்க முடியுமென அவர் தெரிவித்தார்.

## ஜனாதிபதித் தேர்தலின் போது

# சிறுபான்மையினரை தாக்க பேரினவாதிகள் திட்டம்!

## ஐரோப்பிய யூனியனிடம் ஹக்கீம் முறைப்பாடு

கொழும்பு —



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது சிறுபான்மை மக்கள் மற்றும் சிறுபான்மை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மீது தாக்குதல் நடத்த தென்னிலங்கை பேரினவாத சக்திகள் திட்டமிட்டிருப்பதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐரோப்பிய ஒன்றியத்திடம் முறைப்பாடு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி வோல்டர் வில்ட்டனை அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் காலை சந்தித்துப் பேசியபோதே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இந்த முறைப்பாட்டை தெரிவித்தார்.

முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற உத்தரவாதம் அளிக்கும் கட்சிகளைத்தான் தமது கட்சி ஆதரிக்கும் என்றும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரதான கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளைப் பொறுத்தே யாரை ஆதரிப்பது என முடிவு செய்யவுள்ளதாகவும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதியிடம் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் மைக்கல் மையெர், கில்லெஸ் பெர்னாட் ஆகியோர் உடனிருந்தனர்.

# மஹிந்தவின் தேர்தல் அறிக்கையில் அரச ஊழியர்களுக்கு சலுகைகள்!



கொழும்பு —
அனைத்து அரச நிறுவன ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் சுதந்திரக் கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கையில் இடம்பெறும் என்று அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் மங்கள சமரவீர இது தொடர்பாக கூறியதாவது -

ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கை செழுமைப்படுத்தப்பட்டு வருகிறது. மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றால் 2006 ஆம் ஆண்டு ஜனவரி முதல் அனைத்து நிறுவன ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் செயற்படுத்தப்படும் என்ற வாக்குறுதி தேர்தல் அறிக்கையில் இடம் பெறுகிறது.

கடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தால் 1 லட்சத்து 60 ஆயிரம் ஓய்வூதியதாரர்களின் முடக்கப்பட்ட நலத்திட்டங்களை மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ செயற்படுத்துவார்.

நாடு திரும்பியதும் மாகாண அளவிலான பிரசாரக் கூட்டங்களில் தான் பங்கேற்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

தற்போதைய எமது பொது ஜன ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் குறுகிய ஆட்சிக் காலத்தில் 27 ஆயிரத்து 764 பட்டதாரிகளுக்கு நிரந்தர பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்றார் மங்கள சமரவீர.

இன்றைய ஊடகவியலாளர் சந்திப்பின் போது பிரதி அமைச்சர் சிறிபதி சூரியாராச்சி, பதில் அமைச்சர் லஸந்த அழகியவன்ன ஆகியோரும் உடன் இருந்தனர்.

# தமிழரின் போராட்ட நியாயங்களை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும்!

## வடமாகாண அதிபர்கள் சங்கம்

யாழ்ப்பாணம் —

தமிழரின் உரிமைகளையும் போராட்ட நியாயத்தையும் சர்வதேசம் அங்கீகரிக்கக்கோரும் - பொங்குதமிழ் நிகழ்வில் அனைவரும் ஒன்று திரளுமாறும் வடமாகாண அதிபர்கள் சங்கம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில்-

முப்பது ஆண்டுகால தமிழர் உரிமைப் போராட்டம் பல்வேறு வடிவங்களைத் தாங்கி அது கூர்மையடைந்து ஆயுதப்போராட்டமாகப் பரிணமித்து இன்று வரலாற்றுத் திருப்புமுனையொன்றில் தடம்பதித்துள்ளது. தமிழர்கள் இதற்கு கொடுத்தவிலை அளவிட முடியாது.

கடந்த 3 1/2 வருடங்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் மக்கள் ஒரு தற்காலிக சமாதான சூழலை அனுபவித்தார்கள். இது குலைந்து போவதற்கான சூழல் தற்போது ஏற்படத் தொடங்கியுள்ளமை பலருக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

யுத்தத்தில் கல்விச் சமூகம் பல வழிகளில் பாதிப்புக்களைக் கண்டது. கல்லூரிகள் குண்டுவீசி அழிக்கப்பட்டன. அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் படுகொலைசெய்யப்பட்டுள்ளனர். காலங்காலமாக தமிழருக்குரிய கல்வி வாய்ப்புக்கள் திட்டமிட்டு இன்றுவரை பறிக்கப்பட்டுவருகின்றன.

தமிழர் கல்வி திட்டமிட்டு அழிக்கப்பட்டது. கல்விக்கான வளங்கள் எமக்கு மறுக்கப்பட்டன. இத்தனைக்கும் மத்தியில் தமிழர் கல்வியை கட்டிக்காக்க கல்விச் சமூகம் போராடியே வந்தது.

இந்த நிலையில் கல்விச் சமூகம் பல்வேறு இராணுவ கெடுபிடிகளுக்கு மத்தியில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் 2001 இல் முதலாவது பொங்குதமிழ் நிகழ்வை முன்னெடுத்தது.

இது உலகளாவிய ரீதியில் எமது போராட்டத்திற்கு புதிய உந்து விசைகளைக் கொடுத்தது. உயிர்கொடுக்கும் போராட்டத்திற்கு பொங்கு தமிழ் தோள் கொடுத்து நின்றது.

தமிழர்களின் நியாயமான, நீதியான கோரிக்கைகளான சுயநிர்ணய உரிமை, மரபு வழித்தாயகம், தன்னாட்சி அதிகார நிர்வாகக் கட்டமைப்புடன்கூடிய கௌரவமான வாழ்க்கை என்பவற்றையே தமிழர்கள் வேண்டி நிற்கின்றார்கள்.

புரிந்துணர்வு உடன்படிக்கை, இடைக்கால நிர்வாக அமைப்பு, சுனாமி பொதுக்கட்மைப்பு என்று பல படிநிலைகளில் தமிழர்கள் பெரும் விட்டுக்கொடுப்புடன் தமிழர் தலைவர்கள் உடன்பட்டு வந்தபோது பேரினவாத அரசு வழமைபோல தனது சுயரூபத்தை வெளிக்காட்டியது.

இந்த நிலையில் தமிழர் தம் நிலைப்பாட்டை சர்வதேச சமூக நியாயப்பாட்டுடன் புரிந்துகொள்ளவேண்டும்.

இனியும் யுத்தம் ஒன்று வந்தால் ஏற்படப்போவது அழிவுமட்டுமே. தொடர்கின்ற சமாதானச் சூழல் நிரந்தரமான யுத்தநிறுத்தமாக நிலைபெற்று பேச்சுவார்த்தை மூலமான உடன்பாட்டிற்கு வருவதற்கு சர்வதேசம் இலங்கை அரசுக்கு பல்வேறு அழுத்தங்களைக் கொடுத்து வழிப்படுத்தவேண்டும்.

வவுனியா பிரகடனம் உலகிற்கு பல செய்திகளை சொல்லி நிற்கிறது. அதற்கு வலுச்சேர்க்கும் வகையில் பொங்குதமிழ் - 2005 இல் தமிழர்களின் உரிமைக்குரல் ஒட்டுமொத்தமாக ஓங்கிஒலிக்கச் செய்து உலகிற்கு எமது நிலைப்பாட்டை தெரியப்படுத்துவோம். தமிழர்கள் எல்லோரும் ஒன்றாய் கைகோர்த்து எங்கள் சந்ததிக்கான செய்தியை உலகிற்கு அடித்துச் சொல்வோம்.

தமிழர்களாகிய நாம் மரபு வழித் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழவே விரும்புகின்றோம். இதை சர்வதேசம் அங்கீகரிக்கவேண்டும்.

எமது நியாயத்திற்கான போராட்டத்தை அங்கீகரித்து சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கு சர்வதேசம் எமக்குத் துணை நிற்கவேண்டும்- என்பதே தமிழர்களின் ஏகோபித்த கருத்தாகும் என்பதை வட மாகாண அதிபர்கள் சங்கம் வலியுறுத்துவதோடு பொங்கு தமிழில் அனைவரையும் இணைந்துகொள்ளுமாறும் அழைக்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சர்வதேசத்துக்குஉரைக்க அனைவரும்திரண்டுவாரீர்!

## தீவகம் வடக்கு பொது அமைப்புகளின் ஒன்றியம்

யாழ்ப்பாணம் —

பொங்கு தமிழில் திரளப்போகும் மக்கள் கூட்டமே தமிழ்த் தேசத்தின் செய்தியை சர்வதேச சமூகத்துக்கு கூறப்போவதாக அமைவதனால் அனைவரையும் திரண்டு வருமாறு தீவகம் வடக்கு பொது அமைப்புகளின் ஒன்றியம் கோரியுள்ளது.

நாளை தமிழ் மக்களின் வரலாற்றில் மிகமுக்கியமான ஒரு தினமாகும். சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு எதையும் வழங்கப் போவதில்லை என்பதைக்காட்ட நாம் மேற்கொண்ட 3 வருட காத்திருப்பின் புதிய திருப்பத்தை ஏற்படுத்தப்போகும் நாள். தமிழர் தேசம் இனி என்ன செய்ய உத்தேசித்துள்ளது என்பதை நாம் அனைவரும் ஒன்றுதிரண்டு சர்வதேசத்துக்கு உரைக்க இருக்கும் நாள். சிங்கள தேசத்தின் பதவி, அரசியல் நாற்காலி யாருடைய கையில் என்பதில் நாம் அக்கறை காட்டவேண்டியதில்லை.

முதலாளித்துவ கொள்கைகளை உடையோராக இருந்தாலென்ன, சிங்கள அடிப்படைவாதிகளாக இருந்தாலென்ன அவர்கள் அனைவருமே பேரினவாதிகள்தான்.

எனவே, சிங்கள தேச அரசியலைக் கருத்திற்கொள்ளாது தாயகத்தின் விடிவுநோக்கிய பயணத்தில் விரைந்து செல்ல திடசங்கற்பம் பூணுவோம்.

நாளை திரளப்போகும் மக்கள் கூட்டமே தமிழர் தேசத்தின் செய்தியை சர்வதேசத்துக்கு கூறப்போவதால் அனைவரும் திரண்டு வருக என தீவகம் வடக்கு பொது அமைப்புகளின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# சுயநிர்ணய உரிமையை மீட்பதற்கு தமிழர் நாம் பொங்கி எழுவோம்!

## கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்

யாழ்ப்பாணம் —

தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாஷைகளையும், தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் இலங்கை அரசுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் எடுத்துரைக்க பொங்கு தமிழ் நிகழ்வுக்கு அணிதிரள்வோம் என கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

காலங்காலமாக அடக்கி ஒடுக்கப்பட்டுவந்த தமிழ்த் தேசிய இனம் அடிக்கடி எழுச்சிகொண்டு தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையின்மூலம் எமது அபிலாஷைகளையும், கோரிக்கைகளையும் இலங்கை அரசுக்கும் , சர்வதேச சமூகத்துக்கும் பல்வேறு வடிவங்களில் எடுத்துரைத்துவருகின்றது.

பலம்மிக்க எமது விடுதலைப் போராட்டத்தைப் புரிந்துகொள்ளாத பேரினவாத அரசுகள் எம்மை ஏமாற்ற முற்படுகின்றன. சந்திரிகா அம்மையாருடைய அரசு பேச்சைத் தொடங்கப் பின்னடிப்பது ஏனென்று எமக்கு விளங்கிக்கொள்ளவில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்ட விடயங்கள் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை.

உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் எத்தனையோ பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. எமது மக்களின் வாழ்விடங்கள் பல இராணு ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் எமது மக்களுடைய இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, நாளை இடம்பெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வில் சகல கூட்டுறவு ஊழியர்கள், கூட்டுறவாளர்கள் அனைவரும் பொங்கி எழுவோம். புதுப்பொலிவு பெறுவோம். எமது சுயநிர்ணய உரிமையை மீட்போம். எங்கும் தமிழ் ஓங்க ஒன்றாய் எங்கள் கரம் இணைப்போம். சங்கெடுத்து முத்தமிட்டு பொங்கு தமிழென்று கூறுவோம் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# ஒற்றுமையை வெளிப்படுத்த எரிமலையாய் எழுந்து வாரீர்!

## யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் அழைப்பு

யாழ்ப்பாணம் —

பாரிய வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தப்போகும் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வில் தமிழர்கள் அனைவரும் அலையலையாகத் திரண்டு எரிமலையாக எழுந்து எமது உணர்வையும், ஒற்றுமையையும் வெளிப்படுத்த முன்வருமாறு - யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் -

வவுனியாவில் இடம்பெற்ற தேசிய எழுச்சிக்கு வலுச்சேர்க்கும் விதமாக நாளை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருக்கும் பொங்கு தமிழ் -வரலாற்றில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையையும், விடுதலை வேட்கையையும் சர்வதேசம் முன்கொண்டுசெல்லுகின்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

சமாதான ஒப்பந்த காலத்தில் இனவாதிகள் தமது கோர முகத்தை பொதுக்கட்டமைப்பு விடயத்திலேயே வெளிப்படுத்தியுள்ளமையும், பேரினவாத அரசால் முன்னெடுக்கப்படும் நிழல் யுத்தமும், யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளன.

இந்நிலையில் தமிழ் மக்கள் தமது இருப்பை வெளிப்படுத்தவும், தமது போராட்ட நியாயங்களை உலகிற்கு எடுத்துக்காட்டவும் வரலாற்றுப் பொங்கு தமிழ் மூலம் எமக்கு மீண்டும் ஒரு அரிய சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

முதன்முதலாக 2001 இல் இடம் பெற்ற பொங்குதமிழ் இலங்கையில் பாரிய அரசியல் திருப்பத்தை ஏற் படுத்தியது போலவே, இம்முறையும் பாரிய வரலாற்று திருப்பத்தை பொங்கு தமிழ் ஏற்படுத்தும். அனைவரும் திரண்டு வாரீர்! என -

யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் சார்பாக அதன் பொதுச்செயலாளர் ப.கனகலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

# சிங்களப் பேரினவாத அரசின் நழுவல் போக்கை அக்குவேறு ஆணிவேறாக வெளிப்படுத்துவோம்!

## வட - கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கம்

யாழ்ப்பாணம் —

தமிழர் பிரச்சினை தொடர்பாக சிங்கள அரசு கடைப்பிடித்துவரும் நழுவல் போக்கை சர்வதேசத்துக்கு அக்குவேறு ஆணிவேராக வெளிப்படுத்த பொங்கு தமிழ் நிகழ்வில் ஒன்று கூடுமாறு -

வடக்கு -கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

செப்ரெம்பர் 30 பொங்கு தமிழை மிக வெற்றிகரமாக நடத்தவேண்டிய வரலாற்றுக் கட்டாயம் ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு. கடந்த 3 வருடங் களாக அரசு தமிழர் பிரச்சினை தொடர்பாக கடைப்பிடித்துவரும் நழுவல் போக்கை சர்வதேசத்திற்கு அக்குவேறு ஆணிவேறாக வெளிப்படுத்துவோம்.

2002 இல் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை சிங்கள அரசு சரிவர அமுல்செய்யத் தவறியது. ஆறு கட்டப் பேச்சுவார்த்தை தொடர்ந்து முன்னெடுக்கப்படவில்லை.

நாடாளுமன்றம் கலைக்கப்பட் டது. புலிகளுடனான நிழல் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. இடைக்காலத் தன்னாட்சி வரைபும் நிராகரிக்கப்பட்டது.

சுனாமிப் பொதுக்கட்டமைப்பு இலங்கை நீதித்துறையால் தடை செய்யப்பட்டது. 2001 பொங்கு தமிழில் தமிழரின் அபிலாஷைகளை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தினோம்.

2005 இல் எமது அபிலாஷைகளை இலங்கை அரசு நிறைவேற்றாவிட்டால் நாம் என்ன உத்தேசித்துள்ளோம் என்பதை வெளிப்படுத்த அனைவரும் திரண்டு வாரீர் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# உரிமைக்கான போராட்டம் என்பதை உரத்துச் சொல்வோம் உலகத்துக்கு!

## யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

யாழ்ப்பாணம் —

தமிழ் மக்கள் தமது உரிமைக்காகப் போராடுகிறார்களேயன்றி - அவர்கள் பயங்கரவாதிகள் அல்லர் என்பதை சர்வதேசத்துக்கு நிரூபிக்கப் பொங்கு தமிழ் எழுச்சியில் பங்குகொள்ளுமாறு - யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக இணையம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பொங்குதமிழ் எழுச்சியானது தமிழ்மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் தமது உரிமைக்கான குரலை சர்வதேச உலகுக்கு எடுத்துக்காட்டும் வண்ணம் சகலரும் அணிதிரண்டு செயற்படும் நிகழ்வாகும்.

சமாதானப் பேச்சுக்கள் வெறும் கண்துடைப்பு நிகழ்வாகவும், காலத்தை இழுத்தடிக்கும் நடவடிக்கையாகவும் செயற்படாது மக்கள் யாவரும் சமத்துவத்துடன் சகல உரிமைகளும் பெற்று சுதந்திரமாக வாழ பொங்கு தமிழ் வழிசமைக்க வேண்டும்.

தமிழர்கள் தன்மானத்துடன் தலை நிமிர்ந்து வாழ பொங்கு தமிழ் நிகழ்வு உந்துசக்தியாக அமையவேண்டுமென வாஞ்சையுடன் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் வாழ்த்துகின்றது.

# எமது அவலத்தையும், பலத்தையும் வெளிப்படுத்த ஒன்றிணைவோம்!

## இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம்

யாழ்ப்பாணம் —

கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்விடங்களைவிட்டு இடம்பெயர்ந்து வாழும் எமது மக்களின் அவலத்தையும், பலத்தையும், சர்வதேசத்துக்கு வெளிப்படுத்த நாளை பொங்கு தமிழ் நிகழ்வில் ஒன்றுகூடுமாறு யாழ். மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்விடங்களைவிட்டு ஏதிலிக ளாக இடம்பெயர்ந்து மிக அல்லற்பட்டு அடிப்படை வசதிகளின்றி அகதி முகாம்களில் வாழும் எமது நிலையையும், எமது அபிலாஷைகளையும் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துச் சொல்லும் வகையிலும் நாம் ஒரு சுயநிர்ணய உரிமையுள்ள இனம் என்பதை அங்கீகரிக்கவேண்டும் என வலியுறுத்தியும் நாளை மாலை 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ள தமிழ்த் தேசிய பொங்கு தமிழ் நிகழ்வில் இடம்பெயர்ந்து வாழும் அனைத்து மக்களையும் அணி அணியாக அலையெனத் திரண்டுவந்து எமது பலத்தை வெளிப்படுத்த முன்வருமாறு -

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் கேட்டுள்ளது.

# பொங்கு தமிழ் சொல்லும் செய்தி சர்வதேசத்தின் மனக்கதவை தட்டட்டும்

## தமிழ் படைப்பாளிகள் சங்கம்

யாழ்ப்பாணம் —

பொங்கு தமிழ் சொல்லும் செய்தி அனைத்துலக நாடுகளின் மனக்கதவைத் தட்டட்டும். பொங்குதமிழ் விடுக்கும் செய்தி கனேடிய அரசின் செவிப்பறையை எட்டட்டும் என்று ரொரன்ரோ தமிழ் படைப்பாளிகள் கழகம் விடுத்துள்ள செய்தியில் கூறப்பட்டிருக்கிறது.

அந்தச் செய்தியில் - பொங்கு தமிழ் 2005 சீரோடும், சிறப்போடும், எழிலோடும், பொலிவோடும் நடக்க எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கி றோம்.

பொங்கு தமிழ் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மக்கள் மயப்படுத்துவதில் மகத்தான வெற்றி கண்ட இயக்கம்.

பொங்கு தமிழ் - மீசைத் தமிழ் மன்னர் ஆண்ட தங்கத் தமிழீழத்தை மீண்டும் ஆள நினைப்பதில் என்ன குறை என சூளுரைத்த பேரெழுச்சி!

பொங்கு தமிழ் - நாங்கள் எங்கள் வீடுகளுக்கு செல்வதற்காக இராணுவத்தினரே நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்!

என்ற முழக்கத்தை தமிழீழத்தை ஆக்கிரமித்து நிற்கும் சிங்களப் படைக்கு அறிவித்தல் கொடுத்த பேரியக்கம்!

பொங்கு தமிழ் சொல்லும் செய்தி- அனைத்துலக நாடுகளின் மனக்கதவைத் தட்டட்டும். பொங்கு தமிழ் விடுக்கும் செய்தி கனேடிய அரசின் செவிப்பறையை எட்டட்டும்!

இப் பொங்கு தமிழ் பொன்நாளில் கண்டம் விட்டுக் கண்டம் வந்தாலும் தாயக விடுதலைப் பயிருக்கு நாளும் பொழுதும் நீர் வார்ப்போம் எனச் சூளுரைக்கிறோம்!

இப் பொங்கு தமிழ் நன்னாளில் மண்மீட்புப் போருக்கு தோள் கொடுக்கும் உங்களுக்கு நாங்கள் கை கொடுப்போம் என உறுதி கூறுகிறோம் எனக் கூறப்பட்டுள்ளது.

# பொங்குதமிழ் - 2005
## 30.09.2005



## வெல்கின்ற பொங்கு தமிழ்!

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி
தொல்லுலகில் மூத்த தமிழ்! வல்லரசும்
தமிழகத் திருந்தேகி தமிழீழத் தரணியை
நிமிர்ந்திடச் செய்த தமிழ்!

ராசேந்திர சோழன் ராச்சியத்தே தரணியில்
ராசயோகம் கொண்ட தமிழ்! ராசராசன்
சோழச்சக் கரவர்த்தி சோலையில் தவழ்ந்து
நீழவும் வளர்ந்த தமிழ்!

வள்ளுவன் குறளதில் வாழ்க்கைப் படம் போட்டு
அள்ள வந்த தெள்ளுதமிழ் - கள்வரதின்
கபடத்து வீழ்ந்தாலும் கரையாமல் வாழ்கின்ற
அபகீர்த்தி வென்ற தமிழ்!

ஐம்பது எட்டதிலே அயலவன் தார் பூசி
இம்சைகள் செய்த தமிழ்! - இம்மென்றால்
ஆயிரம் பாக்களை இயம்பிடும் புலவர்கள்
நோயிலும் பாடும் தமிழ்!

ஐம்பெரும் காப்பியம் அணியாகப் பெற்றதால்
இம்மானிலத் தெழுந்த தமிழ்! தெம்பொடுநாம்
தெருவழி போகையில் தமிழ்னென் றியம்பிட
அருகதை தந்த தமிழ்!

இன்றெம் இளைஞர் ஈழத்தில் கொண்டாடும்
நன்றெனப் பொங்கு தமிழ் ! - மன்றெலாம்
முழங்கி ஆண்டாண்டு மரபினைக் காத்து
விழங்கிடும் பொங்குதமிழ்!

பல்கலைக் கழகத்து பாங்கார் மேடையில்
வெல்கின்ற பொங்கு தமிழ் - மெல்லியதாய்
இடைவெளி காணாமல் இடமெலாம் மக்கள்
அடைகாண் பொங்கு தமிழ்!

- மூலபாரதி -

## எழுச்சி கொண்டெழுவோம்!


விடுதலை தேடி விதையான வீரர்கள்
விண்ணிலிருந்து எங்களைப் பார்க்கின்றார்
ஓய்ந்திட வேண்டாம் ஓங்கி ஒலிப்போம்
ஒன்றாய் எங்கள் உரிமைக் குரலை!

குருதி சிந்தி உயிரினைத் தந்தவர்
குவலயம் போற்ற எமக்காய் மாண்டவர்
அவர்களின் அவாவினைச் சாத்தியமாக்கிட
அனைவரும் கூடுவோம் ஓரணிதனிலே!

உறவுகள் துறந்து உரிமைக்காய் வாழ்பவர்
உதயங்கள் தேடிய உயிர்க்கொடை தருபவர்
நிறைவுற இவர்களின் இலட்சிய வேட்கைக்கு
நிற்போம் நாங்களும் நிஜமான தூண்களாய்!

பொங்கு தமிழென பொங்கிப் பூரிப்போம்
எங்கும் தமிழனின் உரிமையைச் செப்புவோம்
மங்கிடா எங்களின் சுய நிர்ணயம் பெற்றிட
மக்கள் நாமினி எழுச்சி கொண்டெழுவோம்!

- சூரியநிலா
யாழ்ப்பாணம் -



பொங்குதமிழ் - 2005

# பொங்குதமிழ் - 2005 ஒரு வரலாற்று முக்கியத்துவம்மிக்க நிகழ்வு...

ஈழத்தமிழினத்தின் வரலாற்றை நாம் பின்நோக்கிப் பார்ப்போமாயின், ஈழத் தமிழன் ஏமாந்த வரலாற்றையும், ஏமாற் றப்பட்ட வரலாற்றையுமே நாம் காண் கிறோம். இந்தநிலை மேலும் தொடரு மாயின், எமது இனம் இந்த நாட்டில் பூண் டோடு அழிக்கப்படுவது உறுதி. எம்மை வழிநடத்திய தலைவர்கள் தடம் புரண்டது உண்மை என்பதை ஏற்கின்ற நாம், அதே தவறைத் தொடர்ந்து செய்வோமாயின் அவர்களுக்கும், எங்களுக்குமிடையே எந்த வித வேறுபாடுமில்லை. எமது முன்னைய தலைவர்கள் மீது பழி சுமத்துகின்ற நாம், அதேதவறைத் தொடர்ந்து செய்வோ மாயின், எமது வழித்தோன்றல்கள் எம்மீது வசைபாடுவது உறுதி. வரலாறும் எம்மீது பழிதூற்றுவதையும் நாம் தவிர்க்கமுடியாது.

### பெரியாரின் தொலைநோக்கு

1947 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 15 இல் இந் தியாவுக்கு விடுதலை கிடைத்தபோது "வெள்ளையன் வெளியேறுகிறான். ஆனால், வடக்கன் ஆட்சிக்கு வருகிறான். ஆபத் துகள் எமக்குச் சூழ இருக்கின்றன" என்று பகுத்தறிவுப் பகலவன் பெரியார் முழங் கினார். ஆனால் அவருடைய சிந்தனைக் கும், தொலைநோக்கிற்கும் தமிழினம் ஈடு கொடுக்க முடியவில்லை. இதன் விளைவு தமிழகம் டெல்கி ஆட்சிக்கு - வடக்கன் வல்லாண்மைக்கு அடிபணிந்து செயலற் றுக் கிடக்கின்றது. இந்தியாவில் நிலவுவது இணைப்பாட்சியின் சாயல் மட்டுந்தான். அத்தியாயம் - பிரிவு 356 ஐ வைத்துக் கொண்டு, எந்த மாநில அரசையும் கலைக் கின்ற உரிமை இந்தியாவின் மத்திய அரசுக் குண்டு. இதை எண்ணி அஞ்சுகின்ற மாநில அரசுகளின் முதல்வர்கள், டெல்கிக்கு அஞ்சி செயலற்றுக் கிடக்கிறார்கள். தமிழகத்தை ஆண்ட, ஆளுகின்ற முதல்வர் களும் இந்தச் சட்டத்துக்கு அஞ்சி அஞ்சிச் சாகின்ற கோழைகளாக விளங்குகிறார்கள். இந்த நிலையில்தான் தமிழகம் தன்னையும் காப் பாற்ற முடியாது, எமக்கும் குரலெழுப்பவும் முடியாது தத்தளிக்கிறது. இந்தியா விடு தலை பெற்றவேளையில் தமிழகம் தன்னை விடுவித்து, ஒரு சுதந்திரம் பெற்ற நாடாக மலர்ந்திருக்கமுடியும்.

### முகமது அலி ஜின்னாவின் தொலைநோக்கு

பாகிஸ்தான் உருவாக்கிய முகம்மது அலி ஜின்னாவோ, தொலைநோக்குச் சிந்தனை உடையவராக இருந்தமையால் வெள்ளை யனைப் பார்த்து "நீ வெளியேறு. ஆனால், நாட்டைப் பிரித்த பின்பு வெளியேறு" என்று கூறினார்.

ஈழத்தமிழர்கள் இந்த நிகழ்ச்சியிலிருந்து படிக்கவேண்டிய பாடமென்ன? தமிழகத் தலைவர்கள் செய்த தவறை, எம்மை வழி நடத்திய தலைவர்கள் இங்கும் செய்தார் கள். முகம்மது அலி ஜின்னாவுக்கு இருந்த தொலைநோக்குச் சிந்தனை, எம் முன்னைய தலைவர்களிடம் இருக்கவில்லை. இங்கு வெள்ளையன் வெளியேறியபோது 'நாட் டைப் பிரித்த பின்பு வெளியேறு' என்று எம்மை வழிநடத்துகின்ற தலைவர்கள் குர லெழுப்பியிருந்தால், இன்று எமக்கு இந்த அழிவுநிலை ஏற்பட்டிருக்காது. தொலை நோக்குச் சிந்தனை அல்லது - ஆவது அறிதல் என்று வள்ளுவர் குறிக்கும் அரசியல் நுண்ணறிவு எம் தலைவர் களிடம் இல்லாததால் இந்த இழி நிலைக்கு நாம் ஆளாகியுள்ளோம். வள்ளுவர் குறிக்கும் "ஆவது அறிதல்" எனும் சொற்றொடரை ஆங்கிலத்தில்



மா.க.ஈழவேந்தன்
நாடாளுமன்ற உறுப்பினர்

"The Concept of Futurelogy" என்று கூறுவர்.

முகம்மது அலி ஜின்னா "பாகிஸ் தான் வேண்டும்'' என்று ஓங்கிக் குரலெழுப்பியபோது- காந்தியும், நேருவும் ''பெருமக்கள் அவர்கள் அனைத்திந்திய சிந்தனையுடைய வர்கள். அவர்களிடம் குறுகிய நோக் கில்லை" என்று செய்தியாளர் கூறிய போது, ஜின்னா தனக்கே உரிய புன் னகையை வருவித்துக்கொண்டு கூறி னார். (நீங்கள் கூறுவதுபோல் காந்தி யும், நேருவும் பெருமக்கள் தான். அவர்களிடம் அனைத்திந்திய சிந் தனை உண்டு. அவர்களிடம் குறு கிய நோக்கம் இல்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் என்றோ ஒருநாள் சாகப்போகின்ற அவர்களி டம் சாகாது நிலைத்து வாழவேண்டிய என் சமுதாயத்தை நான் எவ்வாறு அவர்களிடம் ஒப்படைக்க முடியு மென்று கேட்டார்)

அன்று ஜின்னா எழுப்பிய கேள்வி எவ்வளவு பொருள் பொதிந்த கேள் வியாகும். ஐம்பதுக்கு ஐம்பது என்ற சமப் பிரதிநிதித்துவத்தைக் கேட்டி ருந்த தமிழ்க் காங்கிரஸின் தலைவர் திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம் - (தமிழி னத்தின் ஆன்மாவைப் புதைக்க வந்த சோல்பரியை) நாம் நம்ப முடியாது என்று குரலெழுப்பிய பொன்னம் பலம் - சோல்பரி ஒற்றைக் கண் உடை யவராக இருந்ததனால் ''ஒற்றைக் கண்ணன் தந்த ஒற்றையாட்சி தமிழி னத்தை ஒழித்துக் கட்டுமென்று'' குரலெழுப்பிய பொன்னம்பலம், எப் படித்தான் டொன்ஸ்டீவன் சேன நாயக்க என்ற மீசைக்கார சேனநாயக்க விரித்த மந்திரிப் பதவி என்ற மாய வலையில் சிக்கி, தன்னையும், தமிழி னத்தையும் அழிப்பதற்குத் துணை போனாரோ என்பது எம்மை வியப் பில் ஆழ்த்துகின்ற நிகழ்ச்சியாகும். ஜீ.ஜீ.பொன்னம்பலத்துக்கு அடுத்த நிலையில் இருந்த தந்தை செல்வாகூட "வெள்ளையனே வெளியேறு. ஆனால் நாட்டைப் பிரித்த பின்பு வெளியேறு" என்று குரலெழுப்பியதற்குச் சான் றில்லை.

இது நிற்க, தமிழினத்தின் வர லாற்றை மீண்டும் பின்னோக்கிப் பார்ப்போமாயின், பல கசப்பான உண்மைகளை நாம் உணரக்கூடி யதாக இருக்கும். 1904 ஆம் ஆண்டு கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் உரை நிகழ்த்திய சேர்.பொன். இராம நாதன் "சிங்கள நாக்குகள் சிங்களத் தைப் பேசாவிட்டால் சிங்களத்தை யார் பேசுவது" என்று குரலெழுப்பிய இராமநாதன் - 1915 ஆம் ஆண்டில் முதலாவது உலகப்போர் நடைபெற்ற வேளையில் நீர்மூழ்கிக் கப்பலில் லண் டன் சென்று, சிங்கள - முஸ்லிம் கல வரத்தினால் சிங்களத் தலைவர்களு க்கு ஏற்பட்ட அழிவைத் தடுக்க குரல் எழுப்பி வெற்றியீட்டி வருகை தந்த போது, அவரைத் தேரிலேற்றி சிங் களத் தலைவர்கள் தாம் குதிரைகளாக மாறி, அவரை அவரது இல்லத்துக்கு இழுத்துவந்த காட்சி எம் நினைவுக்கு வருகிறது. சிங்கள இனத்தின் மிக நெருக்கடியான காலகட்டத்தில் இராம நாதன் அவர்க ளுக்கு உதவினார். இத னைச் சிங்களத் தலைவர்கள் பின்வரும் முறையில் குறிப்பிட்டுள்ளனர். ''எமது மிக நெருக்கடியான காலத்தில் வடக் கிலிருந்து வந்த மாவீரன் எம்மைக் காப்பாற்றினார். அவர் இல் லாவிடின், நாம் முற்றாக அழித்து ஒழிக்கப்பட் டிருப்போம்" என்ற கூற்றை நாம் இங்கு நினைவுகூருகிறோம்.

### இராமநாதன் சிலையைக் கடலில் தூக்கியெறிய முனைந்த சிங்கள இனம்

சேர்.பொன்.இராமநாதனை உவந்துபோற்றிய சிங்கள இனம், 1920 ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே சிங்களத் தலைமைப் பீடத்தின் செயற்பாட்டில் ஐயுறவுகொண்டு, அவர்களின் கருத்துக்கு மாறுபட்ட முறையில் இராமநாதன் கருத்துத் தெரிவித்ததற்காக, அவரின் சிலை யைக் கடலில தூக்கியெறிய வேண்டு மென்று கூறியதாக 1923 ஆம் ஆண் டில் சிங்களவர்களால் ஏமாற்றப் பட்ட நிலையில் "இலங்கைத் தமிழர் அவையைத் தோற்றுவித்த அவரின் தம்பி சேர்.பொன்.அருணாசலம்- 1923 ஆம் ஆண்டில் தனது உணர்ச்சிமிக்க, ஆழம்மிக்க உரையில் குறிப்பிட்டுள் ளதை நாம் கவனத்தில் எடுப்பது நலம்.

"சிங்களவருக்குச் செய்த உதவிக் காக நன்றியுணர்வுடன் செய்யப்பட்ட சேர்.பொன் இராமநாதன் சிலையை கடலில் தூக்கி எறியப்பட வேண்டும்" என்ற கருத்து சில சிங்கள வட்டாரங் களில் கூறப்படுகிறது என்று தன் உரை யில் குறிப்பிட்டுள்ளார்.

### அருணாசலம் ஏன் தமிழர் பேரவையைத் தோற்றுவித்தார்

அருணாசலம் - இலங்கைத் தமிழ் அவையைத் தோற்றுவித்தநிலையில் தேசியம் என்ற பெயரிலோ அல்லது அனைத்துலக கோட்பாடு என்ற பெய ரிலோ தமிழினத்தை பூண்டோடு அழிக்கின்ற நிகழ்ச்சி நடைபெறுகின் றது என்றும், இதை நாம் எதிர்க்க முயல்கின்றபோது சிங்கள வெறி யர்களைக் கொண்டு தம்மைத் தாக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந்த வெறி யர்களின் கொட்டத்தை தான் அடக்கு வேன் என்று தன் உரையில் குறிப் பிட்டுள்ளார்.

### சட்ட சபையில் இராமநாதனின் இடிமுழக்கம்

தமிழினத்தின் சாபக்கேட்டுக்கு இந்தவிதம் குரல் எழுப்பிய சேர். பொன்.அருணாசலம், தமிழ் அவை யைத் தோற்றுவித்த ஓர் ஆண்டு முடி வதற்கு முன்பு உயிர் துறக்கிறார். ஆனால், இவருடைய அண்ணா சேர். பொன்.இராமநாதன் தனது 79 ஆவது அகவைவரை அதாவது - நவம்பர் 26.1930 வரை இராமநாதனுடைய குரல் சட்டசபையில் ஒலிக்கிறது. எதிர் பாராத காற்றின் வீச்சினால் தற்செய லாக இலங்கையின் கடற்கரையோர த்தில் வந்தடைந்த சிங்களவர்கள் கொடிய நஞ்சு ஊர்வனவாகிய பாம் பையும், தேளையும் கொல்லத் தயங்கு கின்றவர்கள். இந்திய வம்சாவளி மக் களை எப்படி வெளியேறு என்று கூற முடியும் என்று கோபம் பொங்கக் கேட்கின்ற கேள்வியை சட்டமன்றப் பதிவேட்டில் காணலாம். அது மட்டு மல்ல - புத்தளத்துக்கும், அனுராத புரத்துக்கும் இடையிலுள்ள நொச்சி கம என்ற பகுதியில் சிங்களவர்களைக் குடியேற்ற, சிங்கள அரசு எடுக்கின்ற முயற்சியை இராமநாதன் கடுமையாக எதிர்த்ததையும், சட்டமன்றப் பதிவேடு சான்று பகருகிறது. இன்று நொச்சிகம என்ற பகுதி முழு சிங்கள மயமாகி விட்டது. ஆனால், இராமநாதன் வாழ்ந்த காலத்தில் நொச்சிகம தமிழ்ப் பகுதியாக விளங்கியதனால்தான் இராமநாதன் அதில் சிங்களக் குடியேற்றம் ஏற்பட்டு தமிழர் மண் பறிபோகக் கூடாது எனக் குரலெழுப்பியதையும் காண்கிறோம்.

### டொனமூர் எனின் தமிழர் இனிமேல் இல்லை என்று முழங்கியவர் இராமநாதன்

சேர்.பொன்.இராமநாதன் இன அடிப்படையிலமைந்த பிரதிநிதித்துவம் நீக்கப்பட்டு, மாகாண அடிப்படையில் தொகுதிகளை உருவாக்குவதற்கு வழி வகுக்கும் டொனமூர் அரசியல் சட்டத் தைக் கடுமையாக எதிர்ப்பதை சட்ட சபைப் பதிவேடுகள் சான்று கூறுகின்றன. "டொனமூர் எனில் இனிமேல் தமிழர் இல்லை. நாம் வெறிகொண்ட கும் பலுக்கு ஆட்சியை ஒப்படைக்கிறோம். போதிய பாதுகாப்பற்ற நிலையில் இந்தச் சட்டத்தை நாம் ஏற்போமாயின், அது தமிழினத்துக்கு சாவோலையாக அமை யும்'' என எச்சரித்தார். இவருடைய எச்சரிப்பை சிங்களவர் மட்டும் எள்ளி நகையாடவில்லை. மாறாக தமிழ்த் தலை வர்கள் என்று சொல்லப்பட்ட பலர், இராமநாதனுடைய எச்சரிப்பை "அறளை பேர்ந்த கிழவனின் அலறல்'' என்று அவருடைய தொலைநோக்கு சிந்தனை யைப் பொருட்படுத்த மறுத்தனர். இந்த வேளையில்தான் சேர்.பொன். இராம நாதன் திருவாசகத்தை மேற்கோள் காட்டி ''முத்திநெறி அறியாத மூர்க்க ரொடு முயல்வேனே'' என்று கண் கலங் கிக் கதறினார். இவரின் இறுதிக்கால இந்தக் கூட்டம் யாழ்.இந்துக்கல்லூ ரியில் நடைபெற்றது என்பதும் குறிப் பிடத்தக்கது.

இவர் லண்டன் சென்று டொனமூர் சட்டத்தை எதிர்த்து, பிரித்தானிய அர சிடம் அளித்த அறிக்கையைப் பிரித் தானிய அரசு ஏற்கமறுத்தநிலையில், மனச்சோர்வோடு இராமநாதன் இல ங்கை திரும்பினார். ஆனால், இந்த அறிக்கையை அறிஞர் உலகம் (தமிழரின் அரசியல்யாப்பு விவிலியம் என்று புகழ் ந்து பேசுகின்றனர்.)

### தனியே சிங்களவரைக் கொண்ட அமைச்சர் அவையை உருவாக்க துணைநின்ற சுந்தரலிங்கம்

பிற்காலத்தில் அடங்காத்தமிழனாக விளங்கி, ஈழம் தான் எமது இறுதித் தீர்வு எனக் கூறிய சுந்தரலிங்கம் -1936 ஆம் ஆண்டில் Pansinhala Cabinet என்று கூறுமளவுக்கு தனியே சிங்களவரைக் கொண்ட அமைச்சரவையைத் தன் கணித அறிவைக் கொண்டு உருவாக்கிக் கொடுத்தார்.

இதற்காக அவர் பின்பு கண்ணீர் விட் டது உண்மை. ஆனால், வரலாறு இவரை மன்னிக்குமோ என்பது பெருங் கேள் விக்குறி.

### ஒப்பந்தங்கள் ஒப்பேறவில்லை மாறாக கிழித்தெறியப்பட்டன

இனி சிங்களவரோடு தமிழர் செய்த ஒப்பந்தங்கள் எந்த நிலைக்கு ஆளாகிய தென்பதை மிக சுருக்கிப்பார்ப்போம்.

1926 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத் தில் முன்னாள் சட்ட சபை அவைத் தலை வர் சோ.வைத்திலிங்கம் துரைசாமியின் இல்லத்தில், சிங்களத் தமிழ் ஒப்பந்தம் (மகேந்திர ஒப்பந்தம்) செய்யப்பட்டது. அது காலப்போக்கில் கிழித்தெறியப் பட்டது. பின்பு இலங்கை விடுதலை பெற்ற நிலையில், "இணைப்பாட்சியில் இனிய வாழ்வு காண்போம்" என்று கூறிய தந்தை செல்வா - இரத்தக் களரியைத் தவிர்க்கும் முறையில் மிகக் கீழே இறங்கி பண்டா - செல்வா ஒப்பந்தத்தை 1957 ஆம் ஆண்டில் செய்தார். அது மைகாயும் முன்பே கிழித்தெறியப்பட்டது. 1965 ஆம் ஆண்டில் டட்லி - செல்வா ஒப் பந்தம் செய்யப்பட்டது. இது மாவட்ட சபையை உருவாக்கச் செய்யப்பட்டது. மாவட்டசபை உருவாகுவதற்குப் பதிலாக வெறும் மாவட்டமே எமக்குக் கிடைத் தது. இதனையடுத்து சிறிமாவோ-

செல்வநாயகத்துக்கு இடையில் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் 1970 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இடம்பெற்றது. அதுவும் செயல் வடிவமின்றிச் செத்தது. பின்பு 1978 ஆம் ஆண்டில் ஜே.ஆர். அமிர்தலிங்கம் உடன்படிக்கை செய்யப்பட்டது. அதுவும் ஏமாற்றத்திலேயே முடிந்தது. இதனையடுத்து 1983 ஆம் ஆண்டில் பெரிய இனப்படுகொலை ஏற்பட்டதையடுத்து, இந்தியாவின் தலையீட்டின் பெயரில் திம்புவில் 1985 ஆம் ஆண்டில் ஓர் மாநாடு இடம்பெற்றது. திம்பு மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானம் எமக்குத் தெம்பு தரும் என நம்பிய நிலையில் அதுவும் வம்பில் முடிந்தது.

**திம்பு மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் முக்கியமானவை :-**

தமிழர் ஓர் தேசிய இனம்
தமிழருக்கு மரபுவழித் தாயகம் உண்டு.
தமிழர் தம் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் முறையில் சுய நிர்ணயக் கோட்பாடு ஏற்று கொள்ளப்பட வேண்டும்
இவற்றை வெறிகொண்ட ஜே.ஆர் அரசு முற்றாக நிராகரித்தது.

பின்பு 1987 ஆம் ஆண்டில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஜே.ஆருக்கும், ராஜீவ்காந்திக்குமிடையில் நடைபெற்றது. இதை அவசரத்தில் தெளிக்கப்பட்ட அலங்கோலம் என்று நெடுமாறன் தெரிவித்தார். இந்த ஒப்பந்தம் தமிழர் மீது திணிக்கப்பட்ட நிர்ப்பந்தம் எனவும், காலப்போக்கில் தீப்பந்தமாகப் பற்றி எரியும் என்றும் நாம் எச்சரித்தோம்.

நாம் எச்சரித்ததன்படி ராஜீவ் காந்தியின் உயிரும் இந்தத் தீயில் பொசுங்கியது. இந்த ஒப்பந்தம் பற்றி நான் அன்று வர்ணிக்கையில், பெரிய நாட்டின் சிறுமதி படைத்த தலைவர் ராஜீவ் காந்தியும், சின்னத்தீவின் கூர்த்தமதி படைத்த ஜே.ஆருக்குமிடையில் நடைபெற்ற இந்த ஒப்பந்தம் சீரழிவில் முடியுமென்று நாம் எச்சரித்தோம். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் தமிழர் சார்பில் ஒரே ஒரு முக்கிய குறிப்பு - இலங்கையின் வட-கிழக்கு மாகாணத்தை ஈழத்தமிழன் வரலாற்று தாயகம் என ஏற்றுக் கொண்டது மட்டுந்தான்.

இதனை நடைமுறைப்படுத்தும் வகையில் இந்தியா எதுவும் செய்யவில்லை. மாறாக இந்த ஒப்பந்தத்தையடுத்து மாதுறு ஓயாவிலும், மணலாற்றிலும் சிங்களக் குடியேற்றம் பரவியது.

இவை அனைத்தையுமடுத்து, சந்திரிகா 1994 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தபோதும், சந்திரிகா மீது எல்லை மீறி நம்பிக்கை வைத்த தமிழர் குறிப்பாக எமது தமிழ்ப் பெண்கள், சந்திரிகா வளையல் அணிந்து தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். ஆனால், 1995 ஆம் ஆண்டின் இறுதியில் சந்திரிகாவின் மாமனார் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதாகக்கூறி, சிங்கக் கொடியை உயர்த்தினார்.

இந்த வெறியாட்டத்துக்கு சந்திரிகா வாழ்த்துக் கூறியதையும் நாம் மறப்பதற்கில்லை.

பின்பு 2001 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவினுடைய ஆட்சி அமைய, 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி ஓர் ஒப்பந்தம்- பிரபாவுக்கும், ரணிலுக்கும் இடையில் நிறைவேற்றப்பட்டது.

இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு மூன்றரை ஆண்டுகள் உருண்டோடிய நிலையிலும், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், தமிழ் மக்கள் பெற்றது யாதுமில்லை. வெறிகொண்ட சந்திரிகா, ரணிலின் ஆட்சியைப் பலவீனப்படுத்துகின்ற முறையில், ரணில் அமைச்சரவையில் இருந்த பாதுகாப்பு அமைச்சு உட்பட பல முக்கியமான அமைச்சுகளைத் தன்வசமாக்கினார். பலவீனமுற்ற ரணிலின் ஆட்சி கவிழ, மீண்டும் 2004 ஆம் ஆண்டு தேர்தல் இடம்பெற்று, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிப் பொறுப்பை ஏற்றது.

தமிழரைப் பொறுத்தவரையில், தமது ஒற்றுமையைக் காட்டுகின்ற முறையில், 22 நாடாளுமன்ற உறுப்பினரைக் கொண்ட தமிழர் தேசியக் கூட்டமைப்பைத் தெரிவுசெய்தனர். இந்தக் காலகட்டத்தில் உலகின் அனுதாபத்தை எம்பால் திரட்டும் முறையில், விடுதலைப் புலிகளும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரும் தமிழீழத்தை வலியுறுத்தாத நிலையில் "இணைப்பாட்சியில் இனிய வாழ்வு காண்போம்" என்று குரல் எழுப்பினோம். பின்பு அதைக் கூட வலியுறுத்தாது "இடைக்கால அரசையாவது தாவென"க் கேட்டோம். பின்பு சுனாமி சூறாவளியாக உருவெடுத்தபோது, இவற்றைக்கூட வலியுறுத்தாது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசியல் சார்பற்ற பொதுக்கட்டமைப்பு உருவாக்க வேண்டுமென்று தமிழர் விடுதலைக் கூட்டமைப்பும், விடுதலைப் புலிகளும் அரசை வேண்டி நின்றனர். ஆனால், இந்தக் கடற்கோளினால் தமிழ் மக்கள் அழிவுறுதலைக் கண்ணாரக் கண்டும், சிங்கள அரசு இரங்க மறுத்ததன் விளைவு ஏறக்குறைய 10 மாதம் உருண்டோடிய நிலையில்- கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்கள் கண்ணீர் விட்டுக் கதறும் நிலை உருவானது. இவை அனைத்தையும் நினைவு கொண்டுதான் இனிமேல் இரக்கமற்ற கொலையாளிகளுடன் கூடிவாழ முடியாது என்ற முடிவுக்கு வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழீழ விடுதலைப்புலிகளும், தமிழர் எழுச்சிப் பேரவையும் "ஈழம்தான் முடிந்த முடிவு" என 1976 ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டையில் விட்டுக்கொடுக்காது எடுத்த தீர்மானத்தை, வடக்கின் எல்லை வவுனியாவில் தமிழரின் சுயநிர்ணய கோட்பாட்டை ஓங்கி ஒலித்து, உலகின் கவனத்தை ஈர்க்கும் முயற்சியில் ஈடுபட்டோம்.

இதே குரல் மீண்டும் மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பிலும் ஓங்கி ஒலிக்கப்பட்டது. பின்பு வன்னியிலிருந்து வையத்தை நோக்கிக் குரல் எழுப்பினோம். பின்பு தமிழனின் தொல்லை நீக்க முல்லையில் பெரும் மாநாடு கூட்டினோம். அடுத்து இந்தமாதம் 28 ஆம் திகதி கேடினை நீக்கும் கேதீச்சரமும், மடுமாதாவும் எழுந்தருளிய மன்னாரில் மாநாடு கூட்டி, எம் எழுச்சிக் குரலை எழுப்புகிறோம். இவை அனைத்துக்கும் சிகரம் வைப்பதுபோல், தமிழினத்தின் பண்பாட்டின் தலைநகர் யாழ்ப்பாணத்தில் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு கலக்கும் நிலையில், வரலாறு காணாத ஓர் பொங்கு தமிழ் வடிவில் 'பொறுத்தது போதும்' என பொங்கி எழ இருக்கிறோம்.

இந்த நிகழ்ச்சிக்கு மாற்றமுடியாத வரலாற்றுத் திருப்பு முனையாக விளங்கப்போவது உறுதி. "பூத்ததடா தமிழீழம் புலர்ந்ததடா தமிழன் வாழ்வு" என காசியானந்தன் கண்ட கனவு நனவாவது உறுதி. ஐ.நாமன்றில் தமிழீழ புலிக் கொடி பட்டொளி வீசிப் பறக்கப் போவது உறுதி. அதைத் தாழ்ந்து பணிந்திட ஆயத்தமாகுக என அனைவரையும் அழைத்துப் பெருமிதமும், பேருவகையும் கொள்கிறோம். விரைவில் இவை அனைத்துக்கும் மேலாக எமது மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனை உலகத் தலைவன் என உலகம் உவந்து ஏற்பதும் உறுதி என்று கூறி, பொங்கு தமிழ் நிகழ்ச்சிக்கு லட்சக்கணக்கில் திரண்டு, கலந்து கொள்ளும் நிலையில் உலகின் கவனத்தை எம்பால் ஈர்ப்பீர் என்று கூறி விடை பெறுகிறோம். ✪



பத்மினி சிதம்பரநாதன்
நாடாளுமன்ற உறுப்பினர்

பொங்குதமிழ் - 2005

# பொங்கு தமிழுக்கு அணிதிரளும் மக்களின் மன உணர்வுகள்...

**30** ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற இருக்கும் பொங்கு தமிழில் மக்கள் கலந்துகொள்வதற்காகத் தயாராகி வருவதன் அதிர்வால், யாழ்.குடாநாடு குலுங்கிக் கொண்டிருக்கிறது.

இது எமது கடமை என்ற உணர்வுறுதியோடு மக்கள் அணிதிரண்டு வருகின்றனர்.

பொங்குதமிழ் வண்டி - வீதிகள் தோறும் செல்லும் போது, சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை மகிழ்ச்சி ஆரவாரத்தில் திளைக்கின்றனர். சிலர் வண்டியோடு சில தூரம் வந்து, வண்டியை வழியனுப்பிவைக்கின்றனர். வயது முதிர்ந்தவர்கள் கூட வண்டியில் ஏறிச் சிறிது தூரம் வந்து தமது உற்சாகத்தைக் காட்டுகின்றனர். வண்டியை வழியனுப்பி வைக்கின்றனர். ஊரில் உள்ள மக்களையும் கூட்டிக் கொண்டு கட்டாயம் வருவோம் என்ற உறுதிமொழிகள் தருகின்றனர். கடந்த சனிக்கிழமையன்று அண்ணா சனசமூக நிலையத்தை அடைந்த போது, இரவு 10.00 மணி இருக்கும் ... பத்து நிமிடத்தில் 300 இற்கும் மேற்பட்ட மக்கள் கூடி, ஆற்றுகை நிகழ்விலும் பங்குபற்றி, தமது உறுதிகளை தெரிவித்தனர்.

வாகனப் பற்றாக்குறையை உணர்ந்து கொண்ட மக்கள் - சைக்கிள்களில் ஊர்வலமாக வருவதற்கு தீர்மானித்துள்ளனர்.

சக்கோட்டையில் ஒரு அம்மா ' மற்ற ஆட்கள் கேட்பதற்காக அல்ல, நாங்கள் வாறது. எங்கள் மனசு சொல்லுது நாங்கள் இதில் கலந்து கொள்ளவேண்டும்' என்று கூறினார்.

இன்னொரு பெண் -

'பொங்குதமிழுக்கு வராமல் இருக்க அந்தரம். ஒன்றும் செய்யாமல் இருக்க ஏலாது. நெடுக அடைபட்டுக் கிடக்காமல்.. இப்படி வந்தால் தான் உணர்வு தெரியும். நாங்கள் செய்யிற தொழில் உத்தியோகம் இல்லை. கடற்தொழில் எங்கட பிள்ளைகளும் சுதந்திரமாகக் கடலுக்குப் போகவேண்டும். கடலுக்குப் போறதுக்குப் பாஸ் கட்டாயமாயிருக்கு. தொழிலை அழிச்சு அடைச்சிட்டான். கடலை குழப்பிப் குழப்பிப் பிள்ளைகளும் மனம் வெறுத்திட்டு. எண்டாலும் பொங்கு தமிழ் பார்த்தால் தான் மனதுக்கு விடிவு வரும் இண்டையில் இருந்து கடவுளைக் கும்பிடுறேன். இன்டைய மாதிரி பொங்குதமிழுக்கும் நான் போகவேணும் எண்டு' கூறினார்.

இன்னொருவர் -

' எங்கட கடலில் அவனுக்கென்ன அலுவல்? தலைவர் ஒர் வசனம் ஓம் என்று சொன்னால் போதும். எல்லாம் பிடுங்கி எறிஞ்சு கலைப்பம். எல்லாரும் திரண்டால் இவையள் பொயிண்டுக்க இருப்பினமோ? எங்கட உரிமையோட எங்கட இடத்தை விடு எண்டு தான் சொல்லுறம். திரும்ப சண்டை வந்தால், மீட்சி இல்லை. பொங்கு தமிழோட ஆண்டவனே எண்டு விடிவு வந்திட வேணும்' என்றான்.

மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் திரள்வார்கள் என நாம் போகும் இடங்களில் எல்லாம் இனிப்பான செய்தி எம் காதுகளுக்குக் கிடைக்கின்றன. பேருவகை கொள்ள முடிகின்றது. ஒடுக்கப்பட்டு, கட்டுகளால் தளையுண்டு கிடந்த மக்கள் - தம் கட்டுக்களை அறுத்தபடி பலம் பெற்று ஒரு பெரும் சக்தியாய் எழுந்து திரள்கின்றனர். தேசம் தெரிகின்ற பூரிப்பு எங்கும் பொங்கி வழிகின்றது.

எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக திரள்வோமோ அவ்வளவுக்கவ்வளவு விரைவாக விடுதலை. இந்தத் திரள்வு ஒவ்வொரு வீடுகளில் இருந்தும் ஆரம்பிக்க வேண்டும். இந்தப் பொங்கு தமிழ் எழுச்சிக்காக மனங்களில் எழுச்சி கொள்வோம். எங்கள் ஊர்களை அலங்கரிப்போம். பதாதைகள், கொடிகளால் சோடிப்போம். இதை ஒரு புனிதமான நாளாகக் கருதுவோம். நாங்கள் பயணிக்கும் துவிச்சக்கரவண்டிகளில் இருந்து, பேருந்து வரை கொடிகளைப் பறக்கவிடுவோம்.

தமிழ் மக்கள் தங்கள் அபிலாசைகளைத் தெரிவிக்கும் நாள் தான் பொங்குதமிழ். அபிலாசை என்பது - ஒவ்வொருவரின் தனிப்பட்ட ஆசைகளைவிட வித்தியாசமானது. தமிழ்த்தேசியம் தொடர்பான மக்களின் ஒருமித்த ஆசை. இராணுவ அடக்குமுறை காரணமாக வெளிப்படுத்த தனிமனிதராய், பயந்து போயிருந்த மக்கள், ஒன்று திரண்டு பரந்த வெளியில் நின்று ஒருமித்த பலத்தால் பயம் தெளிந்து உலகுக்கு சொல்லும் நாள்.

இதற்கு முதல் நாம் பயத்தினால் மௌனமாக இருக்க எங்களைப் பற்றி, எங்கள் விருப்பம் பற்றி உண்மைக்குப் புறம்பான கதைகளே - சிங்கள பேரினவாதிகளால் வெளி உலகுக்கு கூறப்பட்டது.

1. நாங்கள் பெரும் திரளாகக் கலந்து கொண்டு, எழுச்சியாக நடத்திய பொங்கு தமிழ்கள் தான், தமிழ் மக்களின் உண்மையான விருப்பத்தைச் சுயநிர்ணய உரிமையோடு வாழ விரும்பும் அபிலாசையை உலகறியச் செய்தது.

2. விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த வெற்றிகள் காரணமாகவும், பொங்குதமிழ் எழுச்சி காரணமாகவும்தான், அரசு புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மேற்கொண்டது. பொங்குதமிழுக்கு அந்த சக்தி இருந்தது. இதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். மக்கள் திரண்டால் வெற்றி நிச்சயம்.

**இந்த முறை பொங்குதமிழின் முக்கியத்துவம் என்னவெனில் -**

1. நாங்கள் ஒரு தனித்தேசிய இனம்.
2. எங்கள் மரபு வழித்தாயகத்தில் சுய நிர்ணய உரிமையுடன் வாழ விரும்புகின்றோம்.
3. விடுதலைப்புலிகள் தான் எங்கள் ஏகப் பிரதிநிதிகள்.

என்ற அபிலாசைகளை உலகுக்கு தெரிவிப்பதோடு, இந்த முறை எமது சுயத்தை நிர்ணயிக்கும் எமது போராட்டத்தை அங்கீகரிக்கும்படி சர்வதேசத்தைக் கேட்கின்றோம். எமது தாயக நிலத்தையும், கடலையும் ஆக்கிரமித்து நிற்கும் சிறிலங்கா இராணுவம் - எமது மண்ணை, எமது கடலை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்று கேட்கின்றோம்.

மூன்றரை வருடங்களுக்கு மேல் சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அலுத்து, இறுதியில் சுனாமி மனிதாபிமானக் கட்டமைப்புக்குக் கூட நீதிமன்றத்தால் இடைக்காலத்தடை விதிக்கப்பட்ட நிலையில், சிறிலங்கா அரசாங்கத்தில் முற்றிலும் நம்பிக்கை இழந்த நிலையில், சர்வதேசத்திடம் இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

நாம் ஓர் யுத்த விளிம்பில் நிற்கின்றோம். சிறிலங்கா பேரினவாதிகளால் நிழல் யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

எந்த நிலையிலும் யுத்தம் வெடிக்கும் என்ற நிலையில் பொங்கு தமிழ் - 2005 வருகிறது.

இந்தப் பொங்கு தமிழ் சண்டையின்றி, தமிழர்களின் உரிமையோடு கூடிய சமாதானத்தை அடைவதற்கான இறுதிச் சந்தர்ப்பம் எனவே நாம் கருதுகிறோம். இதற்குச் சர்வதேசம் மதிப்பளிக்கத்தவறும் பட்சத்தில் தவிர்க்க முடியாதபடி ஒரு யுத்தத்தை எதிர்கொள்ள வேண்டியவர்களாய் நாம் நிர்ப்பந்திக்கப்படுவோம்.

எனவே எவ்வளவுக்கெவ்வளவு நாம் அணிதிரண்டு, ஏகோபித்த குரலை சர்வதேசத்தின் காதுகளில் ஒலிக்கச் செய்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு எமது விடுதலை விரைவுபடுத்தப்படும்.

சண்டையின்றி, தமிழர் உரிமையோடு கூடிய சமாதானத்தை இலங்கைத் தீவில் ஏற்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பம் தமிழ் மக்களின் கைகளில் வந்துள்ளது. அதை நாம் தவறவிடக்கூடாது என்பதே எமது கோரிக்கை. ✪

ஊடக அனுசரணை பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழு

பொங்குதமிழ் - 2005

# பொங்குதமிழ் 2005 சொல்லும் செய்தி

அ.இரவி

## மூட்டையைக் கட்டு! நடையைக் கட்டு!



ஒரு நாளில் இருவேறு அனுபவங்களுக்குள் ஆட்பட்டேன். ஒன்று நான் எதிர்பார்த்ததுதான். கடந்த ஞாயிறு (25.09.05) லண்டனிலிருந்து இலங்கை வந்தேன். செப்ரெம்பர் 30 பொங்குதமிழ் அரங்க நிகழ்வின் முன் ஆயத்தங்களை காணும் ஆவலில் உடனே யாழ்ப்பாணம் செல்ல சித்தமானேன். திங்கள் (26.09.05) அதிகாலை விமானம் ஏற சீட்டு கிடைத்தது.

இரத்மலானை விமான நிலையத்தில் கடும் சோதனைக்குள் ஆளானேன். அது எதிர்பார்த்ததுதான். ஆனால் வேறொன்று! அதுதான் ஆச்சரியம். ஒரு தந்தையின் பரிவுடன், அண்ணனின் அக்கறையுடன், அக்காவின் பாசத்துடன் இலங்கை விமானப்படையினர் என்னைக் கவனித்தனர். என்னை என்றல்ல! அங்கு பயணம் செய்ய நின்ற எல்லாத் தமிழர்களையும் தேன் ஒழுக அத்தனை உபசாரம்.

"லண்டனிலிருந்து வந்திருக்கிறீர்களா?"

"லண்டன் எப்படி இருக்கு?"

"அம்மாவிட்டை போறீங்களா?"

போத்தல் உடையக்கூடாது தாருங்கள் கவனமாக கட்டித்தருகிறோம்.

தொலைக்காட்சிக்கு ஒளி ஏற்றி ரீ.வியைப் பாருங்கள்... நேரம் வர உங்களைக் கூப்பிடுகிறோம்.

இப்பிடி இன்னும் இன்னும். சோழியன் குடுமி எதற்கு ஆடுகிறது என்று தெரிகிறது. தமிழர்களின் மனங்களை வெல்ல முனைகிறார்களாம். யுத்த முனையை மாற்றிவிட்டார்கள். உளவியல் யுத்தம் இது. மற்றைய யுத்தத்தில் பிடரியில் குதி அடிபட ஓடினாலும் இந்த யுத்தத்தில் வெல்ல முனைகிறார்கள் என்பது அங்கு நின்ற பல தமிழரின் முகங்களில் தெரிந்தது.

ஒரு கணம் சூழல் மாறினாலும், விமானப்படையினரின் துப்பாக்கிகளிலிருந்து தோட்டாக்கள் சீறி தமிழர்களின் நெஞ்சைப் பிளந்து உயிரைக் குடிக்கும் என்பது உறுதி. ஆனால் அதை அறியாது பல தமிழர் முகம் மலர்ந்து, புன்னகை தவழ நின்றனர். ஆனால் அவர்களது பொதிகள் கடுமையாக சோதனையிடப்பட்டன. தன்னையே தூக்கி நடக்கமாட்டாத வயது போன தமிழ்த் தாயின் பொதியில் அப்படி என்ன ஆயுதம் இருந்துவிடப் போகிறது? ஏ.கே 47 ஆ?

ஆனால் நான் மலர மனம் மகிழ வந்த அன்று இரவே ஒரு சம்பவத்தை சந்தித்தேன். "மூட்டையைக் கட்டு நடையைக் கட்டு" என்றார்கள் யாழ்ப்பாண கிராமத்து மக்கள்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், யாழ்.பல்கலைக்கழக நாடக அரங்கியல் துறைத்தலைவர் சிதம்பரநாதன், அரங்க செயற்பாட்டுக் குழுவினர் இவர்களுடன் திங்கள் நாட்பொழுதை பயன்படுத்த முடிந்தது. ஒருபுறம் பொங்கு தமிழ் ஊர்தியின் அன்றைய உலாத்தலுக்கான ஆயத்தங்கள் நடந்தன. இன்னொரு புறம் பொங்குதமிழ் பாடல்களின் ஒத்திகை நடைபெற்றது. ஒரு நூறுக்கு மேற்பட்டோர் இத்தகைய ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்தனர். அவர்களது மதிய உணவுக்கான தயார்ப்படுத்தல் இன்னொரு புறத்தில் நடந்தது. யாவும் என்னை உணர்ச்சி ததும்பலிற்குள் ஆட்படுத்தின. ஒத்திகைதான் ஆயினும், உணர்ச்சியைப் பிழிந்து பொழிந்து தவில் முழங்க உயர எழுகிறது ஒரு பாடல். அதில் ஒரு வரி

**மானத்தமிழ் மாந்தர் மறவர் வரலாற்றில்**
**வான்படை கண்ட முதல் தமிழன்**

அந்த உண்மை கேட்ட வரியில் அது தந்த இசையில் உடல் சிலிர்த்துப் போயிற்று. மேலும் அதை விபரிக்க என்னிடம் வார்த்தையில்லை.

பொழுது பட்டபிறகு பொங்குதமிழ் ஊர்தி போன ஊர்களுக்குப் புறப்பட்டோம். பத்மினி சிதம்பரநாதன் சில நண்பர்களுடன் நானும் அதில் அடக்கம். நாங்கள் அங்கு போனவேளை ஊர்தி நிற்சாமத்தில் நின்று தெருவெளியரங்கை நிகழ்த்திக் கொண்டிருந்தது. சாதித்திமிருக்கு முதல் குண்டுவெடித்த ஊர் நிற்சாமம். அந்த உணர்வு மனதைத் தொட்டுநிற்க, தெருவெளி அரங்கை கண்டேன்.

> "சொந்த வீட்டில் சொந்த வளவில்
> நட்ட மரங்களின் நிழலில் கூடி
> உறவுகள் சேர்ந்த கதைகள் பேசி
> மீண்டும் நாங்கள் உயிர்த்திடவே
> எங்கள் கோயில் மணிகள் யாவும்
> வந்தோம் என்று ஒலித்திட வேண்டும்
> எங்கள் நிலம் எமக்கு வேண்டும்
> எங்கள் நிலமேமெமக்கு வேண்டும்"

ஊரூராய் பொங்குதமிழ் வண்டி வருகிறது என்ற பாடலுடன் ஊரத் தொடங்கியது பொங்குதமிழ் ஊர்தி. ஒழுங்கைகளில் மக்களைக் கண்டு அவர்களுக்கு பொங்குதமிழ் செய்தி சொல்லி அவர்களைத் திரளுமாறு அழைத்தது. ஊர்தி அப்படியே சங்கானையில் இடம் பெயர்ந்தோர் குடில்கள் அமைந்த இடத்துக்குச் சென்றது. சிங்கள இராணுவ வன்செயல்களால் காங்கேசன் துறையிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் அவர்கள். நூறுக்கு மேற்பட்டோர் அங்கு திரண்டனர்.

பொங்குதமிழைக் குறிக்க பிரமாண்ட பானை. அது ஒரு சிறிய ட்ரக்கில் ஏற்றப்பட்டிருந்தது. சுற்றிவர சிவப்பு மஞ்சள் கொடிகள். அதைச்சுற்றி சிவப்பு மஞ்சள் மின் விளக்குகள். அதுவே பொங்குதமிழ் ஊர்தி.

"இஞ்சற்ரா எங்கட தமிழீழப் பானையை..." ஒருவர் மற்றொருவருக்கு சொல்கிறார். சுற்றி நின்ற பனைமர உச்சிகளைத் தொட்டு பறை முழங்கி எழ

**பறையடிக்கிறன் ஊரவரே**
**பொய் சொல்லி பறையை அடிக்கவில்லை**
**நல்ல பொய் சொல்லி அடிக்கிறன் ஊரவரே**

என்ற பாடல் இசைக்கிறது.

தெருவெளியரங்கு தொடங்கி விட்டது. பொங்குதமிழ் அரங்குக்கு வருவதற்கான அழைப்பு அது. வருகிறோம் வருகிறோம் என்று நூற்றுக்கு மேற்பட்டோர் உற்சாகக் குரல் எழுப்புகின்றனர்.

**நடந்து வருகிறோம் ஓடிவருகிறோம்**
**பறந்து வருகிறோம் பாடி வருகிறோம்**
**எப்படியோ வருகிறோம் வருகிறோம்**
**திரண்டு வருகிறோம்**

காங்கேசன்துறையிலிருந்து இடம் பெயர்ந்த அந்த மக்களின் முகங்களில் பேரொளி வெள்ளம்.

அரங்க நிகழ்வின் இடையில் பத்மினி சிதம்பரநாதனின் உரை. ஆர்ப்பரித்த மக்கள் திரள் அமைதியாகி உரையை செவிமடுக்கிறது. பனைகள் ஒன்றுடன் ஒன்று உராயும் ஓசை. அன்றுதான் அங்கு எனக்கு விருத்தெரிந்த காலத்திலிருந்து 1965 ஆம் ஆண்டிலிருந்து, நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்து வருகின்றேன். புழுதியில் கால் அளையாத வெள்ளை வேட்டிக்காரர் அவர்கள். மக்களுக்காக இரத்தமல்ல வியர்வை கூட சிந்தி அறியாதவர்கள். ஆனால் நாங்கள் பிளேட் எடுத்து விரல் சீவி இரத்தப் பொட்டிட்டு நாடாளுமன்றம் அனுப்பி வைப்போம்.

இங்கு, இப்பொழுது யாழ்ப்பாணத்தின் முதல் பெண் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் அவர்கள் புழுதி பறந்த அந்த மண்ணில், பொங்கு தமிழின் அவசியத்தை எடுத்துச்சொல்லி உரை நிகழ்த்துகிறார். தமிழ் மக்களின் விடுதலையை வேண்டி நிற்கிறார்.

மண்ணெய் விளக்கின் மங்கிய ஒளியில் இரவைக்கழிக்கின்ற அந்தக் கிராமத்தில், பத்மினி சிதம்பரநாதனின் விடுதலையை யாசித்த உரைகேட்டு மனம் பெருமிதம் கொண்டது. காலம் எத்துணை மாற்றம் செய்துவிட்டது. தன் நிகரில்லாத் தலைவன் நமக்கு கிடைத்து விட்டான் என்ற நம்பிக்கைதானே இவைகட்கெல்லாம் காரணம்.

அரங்க நிகழ்வில் மக்கள் இணைந்து விடுகின்றார்கள். ஆற்றுகையாளர்களுக்கு அதிக வேலை வைக்கவில்லை. மக்களே கருத்தை முன்மொழிகின்றனர், தீர்மானிக்கின்றனர், வெளிப்படுத்துகின்றனர். முன்னர் நிகழ்ந்த அரங்க நிகழ்வுகள் மக்களுக்கு அரசியல் கல்வியையும் வெளிப்படுத்தும் ஆற்றலையும் வழங்கி இருக்கிறது என்பதை என்னால் உணரமுடிந்தது.

அவர்கள் இந்த உலகுக்கு அறிவிக்கின்றனர்.

**"சொந்த வீட்டில் சொந்த வளவில் நட்ட**
**மரங்களின் நிழலில் கூடி**
**உறவுகள் சேர்ந்து கதைகள் பேச மீண்டும்**
**நாங்கள் உயிர்த்திடவே**
**எங்கள் கோயில் மணிகள் யாவும் வந்தோம்**
**என்று ஒலித்திட வேண்டும்**
**எங்கள் நிலம் எமக்கு வேண்டும்**
**எங்கள் நிலமே எமக்கு வேண்டும்"**

ஓங்கி உயர்ந்து ரோசமாகக் குரல் எழுப்பி வருகின்றது இந்தப் பாடல். பறையை அறைய அறைய பல்கிப் பெருகுகின்றது குரல். இறுதியாக அவர்கள் சிங்கள இராணுவத்துக்கு சொல்கின்றனர்.

**"ராசா போட்டுவா எண்டம் போறாய்**
**இல்லை.**
**சொல்லி மூண்டு வருசமாச்சு இன்னும்**
**போகேல்லை.**
**இப்ப நாங்கள் கோபத்தோட, ரோசத்தோட,**
**வீரத்தோட, வேகத்தோட செல்லுறம்.**
**உரப்பை தாறம் மூட்டையைக் கட்டு**
**திரும்பிப் பாராமல் நடையை கட்டு"** ☆

## வார்த்தைகளால் இல்லை பலத்தால்



எம் மண்ணில் — சுதந்திரமாய்
நாம் வாழ
மாற்றானிடம்
கேட்கும் நிலை — மறத்
தமிழர்க்கு
இனியும் வேண்டாம்.

பொங்கு தமிழில் — நாம்
ஒன்றிணைவோம்
போலி முகத்திரையை
கிழித்தெறிவோம்.

அகிலம் — நன்றே
உணரட்டும்
வார்த்தைகளால் கேட்போம்
இல்லையெனில் — எம்
பலத்தால் மீட்போம்.

நெடுந்தீவு - ஜெயபாலன்.

## ஆண்ட இனமென்று பொங்கி எழு!



எங்கள் வீடு செல்ல
நாங்கள் பொங்கி எழுவோம்!
எதிரியும் தன் வீடு செல்ல
நாங்கள் பொங்கி எழுவோம்!

தமிழர் நாம் பொங்கி எழுவோம்
தரணியில் நமக்கென்றோர் நாடுபெற!
அகதியாய் அலையும் தமிழர்தம்
அவல மதை போக்கவே
பொங்கி எழுவோம்!

ஆண்டாண்டு காலமதாய் நாம்
ஆண்ட இனமென்று
அகிலம் உணர்வதற்கு - தமிழா நீ
பொங்கி எழு!

அடிமையாய் இனி வாழ மாட்டோம்
என்று சிங்கள தேசத்துக்கு
இடித்துரைக்க
இன்றே நீ பொங்கி எழு!

தம்பியண்ணா

கரை தெரியா சன சமுத்திரமாக திரள்வீர்



பொங்கு தமிழ் அமுதினிலுமினிய எமதின்பத் தமிழ்
பாரெல்லாம் வியந்து போற்றப் பொங்கு தமிழ்
உறவுகழிந்தும் உடமை கழழிந்தும் - சுதந்திர
வேட்கையெனும் உணர்வினை யிழக்காத
நற்றமிழினம் ஈழமதில் நாமெனப் பொங்கு தமிழ்!
வெகு தூரத்திலில்லை விடியலெனப் பொங்கு தமிழ்
பொங்கு தமிழ் வீரமுரசறைந்து பொங்கு தமிழ்
இரண்டாயிரத் தைந்து ஒன்பது முப்பதினில்
ஊரெலா முவந்துகூடி கரைதெரியா சனசமுத்திரம்
நாமெனவே பொங்கு தமிழ் தமிழுணர்வலையுடனே
பொங்கு தமிழ்! பொங்கு தமிழ்! பொங்குக தமிழ்
பொங்குதமிழ்!

கனக இரத்தினசபாபதி

# நமது ஈழநாடு

**வைர வரிகள்**

ஒரு விடாமுயற்சியைக் கைவிடாமல் இருந்தால்தான், முயற்சி தன் வெகுமதியை முழுமையாக விடுவிக்கும்.
- நெப்போலியன் ஹில்.

## நமது நோக்கு

### ஆறும், வரலாறும் பின்னோக்கிப் பாய்வதில்லை....

விடுதலைப் புலிகளின் அரசியல் தூதுக்குழுவினர் தங்கள் நாடுகளுக்கு விஜயம் செய்வதை ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகள் தடை செய்துள்ளதாக சிறிலங்கா - ஈ.யூ பிரகடனம் என்ற தலைப்பில் பொதுநலவாய வெளிவிவகார அலுவலகம் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இத்தடையுத்தரவு உடனடியாக அமுலுக்கு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாது விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாதப் பட்டியலில் இடம்பெறச் செய்வது குறித்தும் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளதாகவும் உள்ளது. இது ஒன்றும் புதினமான- அதிர்ச்சியூட்டும் - செய்தியல்ல. இத்தகைய முடிவு ஒன்றை எடுத்துள்ளமைக்கும் அந்த ஒன்றியம் கூறும் காரணங்கள் எதுவும் புதியவையுமல்ல, உண்மையானதுமல்ல.

கடந்த மூன்று தசாப்தகால இலங்கை அரசின் தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பு யுத்தத்தின்போது நேரடியாகவும், மறைமுகமாகவும் இந்த நாடுகள் இலங்கை அரசுக்கும், அதன் ஆயுதப் படையினருக்கும் நிதியுதவியையும், ஆயுத விநியோக உதவியையும், படையினருக்கான பயிற்சி உதவிகளையும் பன்முகப்பட்ட வகையில் மேற்கொண்டு, தமிழ் மக்களை இலங்கையில் பல்லாயிரக்கணக்கில் கொன்றழிக்கவும், அவர்கள் தாயக பூமியின் வளங்களைச் சிதைத்து அவர்களை ஏதிலியராக்கி, இடம்பெயர்ந்தும் புலம்பெயர்ந்தும் அல்லலுற வைத்த வரலாறு ஒன்றும் ரகசியமானதுமல்ல மறக்கக் கூடியதுமல்ல.....

இலங்கையின் இனவாத அரசு எல்லாவகையிலும் மனித உரிமைகளை மீறும் செயற்பாடுகளில் தீவிரமாகவும், திட்டமிட்ட வகையிலும் ஈடுபட்டுவருகின்றதென்பதை நன்கு அறிந்து கொண்டும், அதன் தமிழின அழிப்பு நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் அளிப்பது போன்று ஐரோப்பிய மற்றும் மேற்குலகம் அதற்கு பல்வேறு வகையிலும் உதவியதைத் தமிழ் மக்கள் என்றும் மறக்கப் போவது கிடையாது.

இன்று ஈழத் தமிழினம் சுமக்கும் சோகங்களுக்கும், துயரங்களுக்கும் முதற்காரணி இலங்கையின் பேரினவாத அரசு என்றால், அதற்கான துணைக்காரணிகளாக - அதற்கு படைகலங்களையும், படைப்பயிற்சிகளையும் வழங்கி ஊக்கமளித்த ஐரோப்பிய மற்றும் மேற்குலக அரசுகளுமே உள்ளன.

இன்றும்கூட சமாதானத்தை வலியுறுத்திக்கொண்டே போர் நிறுத்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்துமாறு கூறிக் கொண்டே, 'இராணுவச் சமநிலை' என்ற போர் நிறுத்த உடன்பாட்டின் முக்கிய அம்சத்தை மீறும் வகையில் இலங்கை அரசுக்கு தொடர்ந்து ஆயுத வழங்கலை மேற்கொண்டுவரும் தவறுகளை இதே சர்வதேச நாடுகளே மேற்கொண்டு வருவதும் நகைப்புக்கிடமான விடயமேயாகும்.

சமாதான சூழ்நிலையில் இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளான பகுதிகளுக்கு விஜயம் செய்யும் ஐரோப்பிய மற்றும் மேற்குலக நாடுகளின் பலதரப்பு முக்கியஸ்தர்களும், இராணுவ மற்றும் இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரிகளும், பாதுகாப்புத் துறைசார் நிபுணர்களும் - இராணுவத் தளங்கள், முகாம்கள் மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ளோர்க்கு சமாதானத்தைப் போதிக்கிறார்கள் என எவரும் கூறுவார்களேயானால் கேட்பவன் சித்த சுவாதீனமற்றவனாகத்தான் இருக்க வேண்டும்.

இவை யாவும் போர் நிறுத்த மீறல் நடவடிக்கைகள்தான் என்பது இன்று விடுதலைப் புலிகளைக் குற்றம் சுமத்துவோருக்குப் புரியாமல் இருப்பது விந்தைதான்.

சறிலங்கா அரசுடன் இணைந்து ஈ.யூ எனப்படும் ஐரோப்பிய யூனியன் விடுத்துள்ள பிரகடனம் விடுதலைப் புலிகளை மிரட்டுவதற்காக என அவர்கள் கூறுவார்களேயானால் அதனைத் தமிழ் மக்கள் ஏற்கப்போவதில்லை.

இது ஏற்கனவே சேடமிழுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள சமாதானச் சூழலை மரணப்படுகுளிக்குள் தள்ளிவரும் பௌத்த சிங்கள பேரினவாதிகளை உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்தும் சமாதான விரோத செயற்பாடாகவே தமிழ் மக்கள் இதனைப் பார்க்கிறார்கள்.


தம் இனத்தை அழித்து, தம் தேசத்தை அபகரிக்க நினைத்துச் செயற்பட்டு வருவோரின் அபிலாஷைகளை நிறைவேற்ற அவர்கள் பொய்ப் பிரசாரங்களில் மயங்கி இவ்வாறான பிரகடனங்களை விடுத்து அவற்றை நடைமுறைப்படுத்த தீவிரம் காட்டுவோர் சமாதான முயற்சிகளின் தங்கள் பக்கமுள்ள நியாயங்களை தார்மீக சிந்தையுடன் அணுகுவார்கள் என தமிழ் மக்கள் நம்புதல் சாத்தியமற்ற விடயமேயாகும்.

எந்தக் காலத்திலும், எந்தக் கட்டத்திலும் ஐரோப்பிய மற்றும் மேற்குலக சமூகத்தின் சமாதான முயற்சிகளைக் கொச்சைப்படுத்தி, அவமதித்து நிராகரிக்கும் போக்கினை இலங்கை அரசு மாற்றப்போவதில்லை என்பதை மட்டுமல்ல, சமாதான முயற்சிகளில் ஏமாற்றி காலங்கடத்தும் போக்கை அது கைவிடப்போவதுமில்லை என்பதை ஐரோப்பிய ஒன்றியம் உட்பட உலக நாடுகள் அனைத்தும் புரிந்துகொள்ளும் நாள் வந்தே தீரும். அப்போது அவர்கள் தங்கள் வரலாற்றுத் தவறுகளை நியாயப்படுத்த காரணிகள் எதுவும் இருக்காது....

ஆறும், வரலாறும் என்றுமே பின்னோக்கிப் பாய்வதில்லை. ஈழத் தமிழ் மக்களின் எதிர்கால வரலாறும் அந்த உண்மையை நிச்சயம் பதிவு செய்தே தீரும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




**'ஊர்சுற்றி' யார் பார்வையில்...**

# பொங்கி எழும் விடுதலை வேட்கையை எந்தத் தடை அணை போடமுடியும்?

குட்டக் குட்டக் குனிகிறவனும் மடையன், குனியக் குனியக் குட்டுகிறவனும் மடையன் என்ற முதுமொழியை ஆசிய ஆபிரிக்க நாடுகள் பலவற்றிலும் அனுபவித்துத் தெளிந்தபோதிலும் - வாலையில் ஆடினவள்போல இன்றும் பிரிட்டன் நடந்துகொள்கிறது என்று சொல்லிக்கொண்டு வந்தார் நண்பர் பரமசிவம்.

இப்பொழுது ஐரோப்பிய யூனியனுக்கு பிரிட்டன் தலைமை தாங்குகிறது. பயங்கரவாத இயக்கப் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பெயரையும் இடம்பெறச் செய்யும் பொருட்டு தீவிரமான பரிசீலனையில் இறங்கியிருப்பதாக அறிவித்திருக்கும் ஐரோப்பிய ஒன்றியம் அதற்கு முன்னோடியாக ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் அங்கத்துவ நாடுகளில் புலிகளின் தூதுக்குழுவினர் பயணங்கள், விஜயங்கள் மேற்கொள்வதற்கும் தடை பிறப்பித்துள்ளனர். இந்தத் தடை உத்தரவு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்திதான் உமக்கு கொதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்று நினைக்கிறேன் என்று சொன்னேன்.

பின்னே என்ன? விடுதலைப் போராட்டங்கள் என்றாலே பிரிட்டனுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் இரத்தக் கொதிப்பு வந்துவிடும். முன்பு இந்தியா, மற்றும் ஆசிய ஆபிரிக்க நாடுகள் பலவற்றை பிரிட்டனும், ஐரோப்பிய வல்லரசுகள் பலவும் அடிமைப்படுத்தி, அவற்றின் வளங்களைக் கொள்ளையடித்து அனுபவித்தன. இந்த ஆக்கிரமிப்புக்களை எதிர்த்து இந்த நாடுகள் போராட்டம் நடத்தின. இந்தியாவில் மகாத்மா காந்தி சாத்வீகப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கி நடத்தினார். இது சரிவராது என்று நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் விடுதலை இராணுவம் அமைத்துப் போராடினார். கென்யாவில் ஜோமோ கென்யாட்டா மௌமௌ இயக்கம் தொடங்கி வெள்ளையர்களின் கழுத்தை அறுக்கும் பூமராங் என்னும் ஆயுதத்தைத் தயாரித்துப் போராடினார், சைப்பிரஸ் ஆர்ச் பிஷப் மக்காரியோஸ் போராட்டம் நடத்தினார். இத்தலைவர்களைக் கைது செய்து சிறை வைத்து அவர்களுக்குப் பயங்கரவாதிகள் என்று முத்திரையும் குத்தி விடுதலைப் போராட்டத்தை நசுக்க, இவைகள் எடுத்த முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்தன. சுபாஸ் சந்திரபோஸைக் கைது செய்யமுடியவில்லை. ஆனால், பயங்கரவாதி என்றனர் என்றார் பரமசிவம்.

பின்னர் இதே வல்லரசுகள்தான் சுபாஸ் சந்திரபோஸையும், ஜோமோ கென்யாட்டாவையும், ஆர்ச் பிஷப் மக்காரி யோசையும் தேசியத் தலைவர்கள் என்று புகழவேண்டிய நிலைக்கு வந்தன என்று நான் சொன்னேன்.

இலங்கை சுதந்திரமடைந்தபோது, இலங்கையின் முதலாவது அரசியல் யாப்பை உருவாக்கிய சேர் ஐவர் ஜென்னிங்ஸ் பத்து ஆண்டுகள் கழித்து 1958ஆம் ஆண்டில் சிங்களவர்கள் காட்டுமிராண்டித்தனமாக தமிழ் மக்கள் மீது இனக்கலகத்தைத் கட்டவிழ்த்துக் கொலையும், கொள்ளையும் நடத்தியதைக் கண்டு "நான் பெரிய தவறு செய்துவிட்டேன்" என்று மனம் வருந்தித் தெரிவித்திருந்தார். இதன் பின்னர் 1983ஆம் ஆண்டுவரை காலத்துக் காலம் இலங்கையில் தமிழ் மக்களுக்கெதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட கொடுமைகளை பிரிட்டனும், ஐரோப்பிய நாடுகளும் கண்டுகொள்ளவேயில்லை. இதன்பின்னரும் சிங்கள, பௌத்த ஆதிபத்திய சக்திகள் தமிழ் இனப்படுகொலையிலும் தமிழ் மண் அபகரிப்பிலும் ஈடுபட்டபோதும், இந்த நாடுகள் ஏன் என்று கேட்கவில்லை. உலக நாடுகளும்கூட உள்நாட்டு விவகாரத்தில் தலையிடக்கூடாது என்று மௌனிகளாக இருந்தன. இனியும் பொறுக்கமுடியாது என்ற நிலையில் தமிழ் இளைஞர்கள் தமது இனத்தைப் படுகொலையிலிருந்து காப்பாற்றுவதற்கும் தமது தாய் மண்ணைக் காப்பாற்றுவதற்கும் ஆயுதம் ஏந்திப் போராடினர்.

சுபாஸ் சந்திரபோஸ், ஜோமோ கென்யாட்டா, ஆர்ச்பிஷப் மக்காரியோஸ் போன்று தமிழீழ விடுதலைப் படைக்கு வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமை தாங்கி தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி தமிழீழத் தாயகத்தின் பெரும் பகுதியை அந்நியரின் பிடியிலிருந்து மீட்டிருக்கிறார். இன்னும் கால்பகுதி தேசமே விடுதலைபெற வேண்டும். இதையும் ஆயுதப் போரினால் மீட்கமுடியும். இனியும் இரத்தம் சிந்தாமல் பேச்சுவார்த்தை மூலம் விடுவிப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கும் சமயத்தில் அதற்குத் தடைசெய்து சிறிலங்கா பேரினவாத அரசுகளும் சக்திகளும் பயங்கரவாத முத்திரை குத்திச் செய்யும் பிரசாரத்துக்கு பிரிட்டனும், ஐரோப்பிய நாடுகளும் எடுபட்டுச் செயற்படுவது வேதனையும் வேடிக்கை யாகவுமிருக்கிறது. கொழும்பிலுள்ள பேரினவாத ஊடகங்கள் எல்லாக் கொலைகளுக்கும் புலிகள் மீதே பழியைப் போடுவதை பிரிட்டனும் ஐரோப்பிய நாடுகளும் ஏற்றுக்கொள்வதாக இருந்தால், எதற்காக இந்த நாடுகள் தமது தூதரகங்களையும் அதில் அதிகாரிகளையும் பெரும் செலவு செய்து இங்கே வைத்திருக்கவேண்டும்? என்று பரமசிவம் கேட்டார்.

அவசரகாலச் சட்டங்களைப் பிறப்பித்து தமிழ் இளைஞர்கள் மீண்டும் பழிவாங்கப்படுகிறார்கள். கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கொல்லப்படுகிறார்கள். இதே அவசரகாலச் சட்ட நடவடிக்கைகள்தான் தமிழ் இளைஞர்களை விடுதலைக்குப் போராடச் செய்தது என்பதை இந்த மேல்நாடுகள் ஏன் உணரவில்லை? என்று கேட்டேன்.

பயங்கரவாதப் பட்டியலில் மீண்டும் விடுதலைப் புலிகளைச் சேர்த்துக் கொள்ளலாம். இதனால், பொங்கி எழும் விடுதலை வேட்கையை எந்த வல்லரசும் தடுத்து அணைபோட்டுவிடமுடியாது இதே ஐரோப்பிய அரசுகள் தலைவர் பிரபாகரனை தேசியத் தலைவன் என்று விரைவில் புகழ்மாலை சூட்டுவது நிச்சயம் என்று சொன்னபடி வீறுடன் புறப்பட்டார் பரமசிவம்.

☆

# அனைத்து மக்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும்!



## புதிய நீதிபதி தியாகேந்திரன்

யாழ்ப்பாணம் —

அனைத்து மக்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்பதே தனது விருப்பம் எனப் புதிதாக யாழ்.மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்பேற்ற எஸ்.தியாகேந்திரன் தெரிவித்தார்.

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியாக நேற்று முன்தினம் தனது பணியைப் பொறுப்பேற்ற பின்னரே. அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

நீதிமன்றங்கள் சமுதாயத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எமது மக்களின் ஒரு பகுதியினருக்கு சிறப்புரிமை கிடைக்காது இருக்கின்றது. சாதாரண நீதிமன்றங்களை விட, நீதி கேட்டுச் செல்லும் உயர் நீதிமன்றங்களும் உண்டு. ஆனால், பெரிய தொகை நிதி செலவாகும். சாதாரண மனிதர் கீழ் நிலை நீதி மன்றத்தின் தீர்வைப் பெற்று வீடு செல்கின்றனர்.

எனவே, கீழ் நிலை நீதி மன்றத்தில் மக்களுக்கு நீதி வழங்கும் பணி மிகவும் அளப்பரியது. 80 வீதமான மக்களுக்கு கீழ்நிலை நீதிமன்றங்களிலேயே தீர்ப்பு வழங்கப்படுகின்றது. மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதே எனது விருப்பம் என்றும் மேல் நீதிமன்ற நீதிபதி எஸ். தியாகேந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை யாழ். மேல் நீதிமன்ற அரச சட்டத்தரணி சுகந்தி கந்தசாமி புதிய நீதிபதியை யாழ். மேல் நீதிமன்றத்தின் சார்பாக வரவேற்றார்.

# பொருட்காட்சிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம் —

சர்வதேச தினங்களை நினைவூட்டும் வகையில் - வடமராட்சி ஒளி நிறுவனமும், வடமராட்சி கல்வி வலயமும் இணைந்து நடத்தும் - பொருட்காட்சிப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் ஒளி நிறுவனத் தலைவர் ஆ.சிவமயூரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக போரூட் யாழ். மாவட்டத் திட்ட முகாமையாளர் கலந்து கொள்வதுடன், சிறப்பு விருந்தினர்களாக நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் நா.கோகுலதாஸ், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா, பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன், கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (12)

# சமூர்த்தி மகா சங்கத்தினால் உதவிப் பொருட்கள் வழங்கல்



யாழ்ப்பாணம் —

யாழ். பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்கத்தின் சமூக பாதுகாப்பு மன்றத்தால், யாழ். பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழுள்ள மாணவர்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு - நேற்றுமுன் தினம் யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ். பிரதேச செயலர் பற்றிக்டிறஞ்சன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் கலந்து கொண்டார்.

இதன்போது யாழ். பிரதேச செயலர் பிரிவில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழுள்ள 125 மாணவர்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

உதவிப் பொருட்களை அரச அதிபர் கே.கணேஸ் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் வழங்கினர்.

இந்த நிகழ்வில் மாண வர்கள், பெற்றோர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அலுவலர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

# தென்மராட்சி பிரதேச செயலகம் புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளது

தென்மராட்சி —

தென்மராட்சிப் பிரதேச செயலகம் எதிர்வரும் 7.10.2005 அன்று முதல் புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளது.

அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு அரச அதிபர் கே.கணேஸ் இந்தக் கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

பிரதேச செயலகத்தால் நூல் ஒன்றும் வெளியிடப்பட்டு வைக்கப்படவுள்ளது. கடந்த காலத்தில் இந்தப் பிரதேச செயலகம் பாரிய இட நெருக்கடிகளின் மத்தியில் தனியாருக்குச் சொந்தமான வீடு ஒன்றில் இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. (25)

# 25 தூவல் நீர்ப்பாசன தொகுதிகள் இணைத்துக் கொடுக்கப்படவுள்ளன

கோப்பாய் —

கோப்பாய் பிரதேசத்திலுள்ள புத்தூர், உரும்பிராய் கமநல சேவை நிலையப் பிரிவுகளிலுள்ள விவசாயிகளின் நலன் கருதி 25 தூவல் நீர்ப்பாசனத் தொகுதிகள் இணைக்கப்படவுள்ளதாக பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.சந்தியேந்திரன் தெரிவித்தார்.

தூவல் நீர்ப்பாசனத் தொகுதி ஒவ்வொன்றுக்குமான செலவில் 50 வீதமான 15 ஆயிரம் ரூபாவை விவசாயிகள் தவணை முறையில் செலுத்த முடியுமெனவும், எஞ்சிய 50 வீதமான இணைப்பு பராமரிப்புச் செலவை ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்ட நிதியில் இருந்து வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் 100 நீர்ப்பாசனத் தொகுதிகளை கமநல சேவை நிலையங்கள் ஊடாக பொருத்தவுள்ளதாகவும், இவற்றை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரியவருகிறது. (91)

# சிறுவர் நாடாளுமன்ற நிகழ்வுக்கு குடாநாட்டிலிருந்து 10 பேர் பங்கேற்பு

யாழ்ப்பாணம் —

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோருக்கும், மீளக்குடியமர்ந்தோருக்குமான தேசிய பாதுகாப்புக்கும் நிலையான விசேட செயற்திட்டத்தின் கீழ் சிறுவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய சிறுவர்கள் - இந்த மாதம் முதலாம் திகதி அனுராதபுரத்தில் நடைபெறவுள்ள சிறுவர் நாடாளுமன்ற நிகழ்வில் பங்குபற்றவுள்ளனர்.

இந்தச் சிறுவர் நாடாளுமன்ற நிகழ்வில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 10 சிறுவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

ஆணைக்குழுவின் இந்தப் பிரிவினரால் நடத்தப்பட்ட போட்டிகளில் - பேச்சுப் போட்டியில் 14 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள் பிரிவில் இருவரும், 18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள் பிரிவில் இருவரும், கட்டுரைப் போட்டியில் 14 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களில் ஒருவரும், 14 வயதுக்கு மேற்பட்டவர்கள் பிரிவில் ஒருவரும், நாடகப் போட்டியில் நால்வருமாக மொத்தம் 10 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆணைக்குழுவின் இந்தச் செயற்திட்டம் உள்ள 8 மாவட்டங்களைச் சேர்ந்த சிறுவர்களே இந்த நிகழ்வில் பங்குபற்றுகின்றனர்.

இந்தச் சிறுவர் நாடாளுமன்ற நிகழ்வு அனுராதபுரம் சேனநாயக்க பூங்காவில் இடம்பெறவுள்ளது.

# இலவச வைத்திய முகாம்

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தினரின் இலவச வைத்திய முகாம் எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 9 மணிக்கு கைதடி முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சிறுநீரக பரிசோதனை, கண்பரிசோதனை, கண்ணாடி வழங்கல், என்பவற்றுடன் அன்றைய நாள் முதியவர்களுக்கு விசேட மதியபோசனமும், ஆடைகளும் வழங்கப்படவுள்ளன.(44)

# கொடிவாரம்

யாழ்ப்பாணம் —

சிறுவர் அபிவிருத்தி தினத்தை முன்னிட்டு கொடி வெளியீட்டு வைபவம் நாளை மறுதினம் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தளத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்ட அரச செயலகத் திட்டப் பணிப்பாளர் ஜே.கேதீஸ்வரன் பங்குபற்றி, முதலாவது கொடியைப் பெற்று, கொடி வாரத்தை ஆரம்பித்து வைப்பார். (12)

# சின்னஞ் சிறு செய்திகள்

## சான்றிதழ்கள் வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம் —

போரூட் வேலைத்திட்ட கிராமத்துக்குட்பட்ட துணி வர்ணம் மற்றும் சாறி வேலைப்பாடுகள் பற்றிய பயிற்சி நெறி நிறைவு பெற்று, இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று போரூட் பயிற்சி மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இதில் போரூட் நிகழ்வுத்திட்ட உத்தியோகத்தர் என்.கோகுலதாஸ், போரூட் திட்ட இணைப்பாளர் நீல் ஆம்ஸ்ரோங், பயிற்சி ஆசிரியர் ராஜ்குமார் பிரதீபா ஆகியோரால் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 1500 ரூபா பெறுமதியான ஆரம்ப தொழில் முயற்சிக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டது. (12)

## நல்லொழுக்க தினம்

சுதுமலை —

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் சர்வதேச நல்லொழுக்க தினம் ஒக்ரோபர் 3 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு மானிப்பாய்-மெமோறியல் நவோதயா ஆங்கிலப் பாடசாலையில் இடம் பெறவுள்ளது.

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் சி.இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - மானிப்பாய் பிரதேசசபை செயலாளர் எம்.சாந்தசீலன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர், உதவி பிரதேச செயலர் திருமதி.அன்ரன்யோகநாயகம், பாடசாலை அதிபர் திருமதி வே.சண்முகரத்தினம் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (91)

## உதைபந்தாட்ட போட்டிகள்

தெல்லிப்பளை —

தெல்லிப்பளை கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதை பந்தாட்டப் போட்டிகள் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளன.

இந்தப் போட்டிகள் யாவும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, யூனியன் கல்லூரி மைதானங்களிலேயே இடம் பெறும் எனவும், அளவெட்டி அருணோதயா கல்லூரி மைதானத்தில் என முன்னர் அறிவிக்கப்பட்ட போட்டிகள், யூனியன் கல்லூரி மைதானத்திலேயே நடத்தப்படுமென தெல்லிப்பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாயநாதன் அறிவித்துள்ளார். (101)

## சேக்கிழார் மாநாட்டு போட்டிகள்

சுதுமலை —

சேக்கிழார் மாநாட்டு கலை இலக்கிய தேசிய மட்டப் போட்டிகள் எதிர்வரும் 1 ஆம் திகதிகளில் கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மாவட்டப் போட்டியில் கீழ் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற மானிப்பாய் மெமோறியல் நவோதயா ஆங்கிலப் பாடசாலை மாணவிகளான கோபிகா சேனாதிராஜா, வைஸ்ணவி ஜெயச்சந்திர பைரவமூர்த்தி ஆகியோர் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (91)

## மாணவரிடையே போட்டிகள்

உடுவில் —

சக்தி போரூட் அமைப்பினரால் சர்வதேச நல்லெழுக்க தினத்தை முன்னிட்டு - பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்டுவரும் போட்டிகளில் சகலகலாவல்லி மாலை இசைக்கும் போட்டி இன்று காலை 9 மணிக் கும், சிறுவர் நாடகப் போட்டி 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் இராமநாதன் கல்லூரியில் நடைபெறுமென உடுவில் கோட்டக் கல் விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் தெரிவித்துள்ளார். (101)

## மாடிக் கட்டடம் அமைப்பு

கச்சாய் —

கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசலைக்கு சுமார் 75 லட் சம் ரூபா செலவில் இரு மாடிக்கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளது. இதற்கென அண்மையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

கடந்த காலத்தில் இந்தப் பாடசாலையில் நிலவிவந்த இடப் பிரச்சினை, இந்தக் கட்டட வேலைகள் முடிந்த பின்னர் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் கல்லூரி அதிபர் தெரிவிதித்தார். (25)

## வருடாந்த உற்சவம்


கோண்டாவில் —

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தான வருடாந்த உற்சவம் - எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.


9ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும், 11ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தக் திருவிழாவும் நடைபெறவுள்ளன.


# மன்னார் தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்விலிருந்து...




















நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகம் மீது தாக்குதல்!

## காவலாளி ஒருவர் பலி; நான்கு பேர் காயம்

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு மாந்தீவுச் சந்தியில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மாவட்ட அலுவலகம் மீது நேற்றிரவு 8.45 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட தாக்குதலில் காவலாளி ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் நான்கு பணியாளர்கள் காயமுற்றனர்.

வேலுப்பிள்ளை எனப்படும் திராய்மடுவைச் சேர்ந்தவரே சம்பவ இடத்தில் உரிழந்தவராவார். இவரின் சடலம் தற்போது மட்டக்களப்பு வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகத்தை நோக்கி 5 கைக்குண்டுகள் வீசப்பட்டதாகவும், இந்தத் தாக்குதல் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் அங்கு நிறுத்தப்பட்டிருந்தபஸ், பிக்கப், ஒட்டோ உள்ளிட்ட வாகனங்களும் அலுவலகக் கட்டடமும் சேதமாக்கப்பட்டன.

இரண்டு பொலிஸார் இந்த அலுவலகத்துக்கு பாதுகாப்பு வழங்கிவந்தனர். இதுவரை தமிழ்ப் பொலிஸார் காவல் பணியில் ஈடுபட்டு வந்ததாகவும் நேற்று முன்தினம் தொடக்கமே சிங்கள பொலிஸார் மாற்றப்பட்டதாகவும் தெரியவருகிறது.

# ஐரோப்பிய யூனியனின் முடிவுக்கு பொதுஅமைப்புகள் கண்டனம்!

யாழ்ப்பாணம் —

விடுதலைப் புலிகளுக்கு எதிராக - ஐரோப்பிய யூனியன் எடுத்திருக்கும் நிலைப்பாடு தொடர்பாக பல்வேறு பொது அமைப்புகள் - விசனம் வெளியிட்டுள்ளன.

சமாதான முயற்சிகளுக்குப் பின்னடைவை ஏற்படுத்தும் வகை யில் - ஐரோப்பிய ஒன்றியம் எடுத்திருக்கும் முடிவு தமிழ் மக்கள் மத்தியில் ஏமாற்றத்தையும், கவலையையும் அளிப்பதாகவும் -

இந்த முடிவால் சிங்களப் பேரினவாத சக்திகள் தமிழருக்கு எதிரான போக்கில் மேலும் உத்வேகம் பெறும் நிலை உருவாகியிருப்பதாகவும் யாழ்.குடாநாட்டு பொது அமைப்புகள் யாவும் கருத்து வெளியிட்டுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியம் எடுத்த இந்த முடிவுக்கு கண்டனம் தெரிவித்திருக்கும் பொது அமைப்புகள் - இந்த முடிவை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளன.

# ஹெல்பிங் அம்பாந்தோட்டை விசாரணைகள் இடைநிறுத்தம்!

## உயர் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு —

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் ஹெல்பிங் அம்பாந்தோட்டை வங்கிக் கணக்குத் தொடர்பான விசாரணைகளை உடனடியாக இடை நிறுத்துமாறு உயர் நீதிமன்றம் நேற்று தடை உத்தரவு பிறப்பித்தது.

இரகசியப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுவந்த இந்த வங்கிக் கணக்கின் விசாரணைகள் தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகத் தெரிவித்து இந்த விசாரணையை இடைநிறுத்துமாறு பிரதமரும் ஜனாதிபதி வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரணைக்காக எடுத்துக் கொண்ட உயர்நீதிமன்றம் இந்த வழக்கின் விசாரணையை அடுத்தவருடம் ஜனவரி 17ஆம் திகதி வரை ஒத்திவைக்க உத்தரவிட்டது.

(இன்னொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்)

# குழப்ப முயன்ற...

றம் ஏற்பட்டது.

மன்னார் வீதிகள் எங்கும் பெருமளவிலான இராணுவத்தினரும் இராணுவ கனரக வாகனங்களும் நிறுத்தப்பட்டன.

தேசிய எழுச்சி நிகழ்வு நடைபெற்ற அரங்கத்தைச் சுற்றிலும் பெரும் எண்ணிக்கையிலான இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருந்தனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவநாதன் கிஷோர், சிவசக்திஆனந்தன், செல்வம்அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம் ஆகியோர் தேசிய எழுசசி நிகழ்வில் பங்கேற்கும் மக்களை அச்சுறுத்தும் வகையிலேயே இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருப்பதாக இராணுவ அதிகாரிகளிடம் முறையிட்டனர்.

இராணுவத் தரப்பினர் நிகழ்வரங்கப் பகுதியிலிருந்து வெளியேற வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

கடந்த சில நாட்களுக்குமுன் இராணுவத்தினருடனான நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பின் போது - தேசிய எழுச்சி நிகழ்வுக்கு எவ்வித இடையூறும் இராணுவத்தரப்பு ஏற்படுத்தாது என்று உறுதி அளித்திருந்தது. ஆனால் அதை நிராகரித்து நேற்று இடையூறு ஏற்படுத்தும் வகையில் தங்களது நடவடிக்கைகளை மன்னாரில் இராணுவம் தீவிரப்படுத்தியதால் மக்கள் கடும் விசனமடைந்தனர்.

எனினும் படையினரின் அச்சுறுத்தும் நடவடிக்கைகளுக்கும் மத்தியில் 50 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் தமிழ் தேசிய எழுச்சி நிகழ்வில் பங்கு கொண்டது குறிப்பிடத்தக்கது.

# மனைவி பொல்லால் தாக்கியதில் அரியாலையில் கணவன் பலி!

யாழ்ப்பாணம் —

வாக்குவாதம் முற்றியதால் மனைவி பொல்லால் கணவனைத் தாக்கிக் கொன்றதாக கூறப்படும் சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இரவு அரியாலைப் பகுதியில் இடம்பெற்றது.

பேச்சி அம்மன் கோயிலடி அரியாலையை சேர்ந்த செல்லத்துரை பாலசுப்பிரமணியம் (வயது 67) என்பவரே பொல்லால் தலையில் தாக்கப்பட்டு உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது -

பிள்ளைகள் திருமணம் முடித்து சென்ற பின் தனிமையாக வாழ்ந்து வந்த கணவன் - மனைவியிடையே நீண்டகாலமாக சச்சரவு நிலவி வந் தது.

நேற்று முன்தினம் இரவு கணவன் மனைவிக்கு இடையே வாக்குவாதம் முற்றி - அது கைகலப்பாக மாறியது.

இதனால் ஆத்திரமுற்ற மனைவி கணவனை பொல்லால் தாக்கியதாக கூறப்படுகிறது. இதனால் கணவன் உயிரிழந்தார்.

யாழ்.மாவட்ட நீதிவான் சறோ ஜினி இளங்கோவன் சம்பவ இடத் தைப் பார்வையிட்டு சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப் படைத்து விசாரணை செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். சடலம் பிரேத பரிசோதனைக்காக போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# தடையை மீறி ஏறிய...

டது. படையினரின் தடையையும் மீறி தேசியக்கொடி ஏற்றப்பட்டு நிகழ்வு சிறப்புற நடைபெற்று முடிந்தது.

எனினும் இந்தச் சம்பவத்தால் ஆத்திரமுற்ற படையினர் உயிலங்குளம் சோதனைச் சாவடியை நேற்று மாலை 6 மணியுடன் மூடிவிட்டனர். இரவு 10மணிவரைசோதனைச் சாவடியை திறந்திருப்பதாகத் தெரிவித்த படையினர் மாலை 6 மணியுடன் சோதனைச் சாவடியை மூடியதால், சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணு வக் கட்டுப்பாடற்ற பகுதிமக்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்க நேரிட் டது.

இவர்கள் நேற்று மன்னாரில் பொது இடங்களில் தங்கவைக்கப்பட்டு இன்று காலையே வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கோட்டை ரயில் நிலையத்தில் பரபரப்பு!

கொழும்பு —

கொழும்பு கோட்டைரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று காணப்பட்ட சந்தேகத்திற்கிடமான பொதியால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பயணி ஒருவர் இந்தப் பொதி குறித்து பொலிஸாருக்குத் தெரிவித்ததை அடுத்து குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் சோதனை நடத்தினர். இதனால் கோட்டை ரயில் நிலையப் பகுதியில் போக்குவரத்து சற்று நேரம் தடைப்பட்டது.

இந்த நிலையில் பொலிஸார் சந்தேகத்துக்கிடமான பொதி மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபோதும் அதில் சந்தேகத்துக்கிடமான வெடி பொருட்கள் எவையும் காணப்படவில்லை எனக் கண்டறியப்பட்டது. (01)

# மன்னாரில் வரலாறு காணாத...

மன்னார் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இருந்து வந்திருந்த மாணவர்களினால் மன்னார் பொது விளையாட்டரங்கு மக்கள் வெள்ளமாக காட்சியளித்தது.

தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டை முன்னிட்டு மன்னார் நகரம் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் பூண்டிருந்தது.

மாலை 4 மணிக்கு தமிழ்த் தேசிய எழுச்சி சுடரேற்றலின் பின்னர் அரங்க நிகழ்வுகள் சீ.செளந்தரநாயகம் தலைமையில் ஆரம்பமானது. இந்த நிகழ்வில் பொதுச்சுடரை அன்சாரின் தந்தையார், துணைப்படை மாவீரர் சிவசித்தியானின் துணைவியர் ஆகியோர் ஏற்றினர். தமிழீழ தேசிய கொடியை 2 ஆம் லெப்.மாலதியின் தந்தையார் ஏற்றிவைத்தார்.

பேசாலை பிரதேச செயலர் செபஸ்தியாம்பிள்ளை, மடுப்பிரதேச செயலணித் தலைவர் தோம்சன் முள்ளிக்குளம் பிரதேச செயலகக் குழுவைச் சேர்ந்த வீரப்பன், மாவட்ட செயலகக் குழுவைச் சேர்ந்த பிறேமா, சித்திரா, மடு கல்விவலய பணிப்பாளர் எம்.தெய்வேந்திரன், முசலிப் பிரதேச செயலர் மு.சந்திர ஐயா, மன்னார் பிரதேச செயலர் ஸ்ரான்லின் டிமேல், அடம்பன் பிரதேச செயலர் சுதாகர்,நானாட்டான் பிரதேச செயலர் சம்பந்த மூர்த்தி, அடம்பன் பிரதேச செயலாளர் குழுவைசேர்ந்த சத்தியோகு ஆகியோர் எழுச்சிச் சுடர்களை ஏற்றி வைத்தனர்.

இந்த நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.க.ஈழவேந்தன், செல்வம் அடைக்கலநாதன், கனகசபை, இரா.சம்பந்தன், வினோநோகராதலிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் மன்னர் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையும் உரை நிகழ்த்தினர்.

மன்னார் நகர் வரலாறு காணாத இந்த மாபெரும் எழுச்சி நிகழ்வில் ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இவர்களில் பெரும்பாலானோர் முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது. உணர்வு பூர்வமாக தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்ட இந்த எழுச்சி நிகழ்வு இரவு 8 மணியளவில் நிறைவடைந்தது.

அரச அதிபர் தி.விஸ்வலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்களான க.கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவசக்தி ஆனந்தன், மாவை சேனாதிராஜா, மலையக மக்கள் முன்னணி தலைவர் பெ.சந்திரசேகரன் திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்கினேஸ்வரன் ஜனாப் அலிகான் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

# நாளை பொங்கு தமிழ்...

ஏற்படுவதைத் தடுப்பதற்கான சந்தர்ப்பமாக இந்தப் பொங்கு தமிழ் நிகழ்வில் அணிதிரளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டின் அனைத்துப் பிரதேசங்களில் இருந்தும் மக்கள் பொங்கு தமிழ் நிகழ்வுக்குச் செல்வதற்கான போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட் டிக்கிறது.

பொங்கு தமிழ் நிகழ்வுக்கு தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், வெளிநாட்டு தூதரகங்களின் அதிகாரிகள், ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பிரதிநிதிகள், வெளிநாட்டு மற்றும் தென் னிலங்கை ஊடகவியலாளர்கள் எனப் பல்வேறு தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இதேவேளை, யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பிரதேசங்களின் பொது இடங்கள், பாடசாலைகள் ஆகியவற்றின் முன்பாக சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரித்தும், ஒலிபெருக்கிகள் கட்டப்பட்டு எழுச்சிப் பாடல்கள் இசைக்கப்படுகிறது.

பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு நடைபெறும் மருத்துவபீட மைதானத்தில் தேசியத் தலைவரின் உருவப்படம் பிரமாண்டமாக அமைக்கப் பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவால்....

எங்களது தலைமைப் பீடத்தின் உறுதியான நிலையை விளக்குவோம்.

நோர்வே தரப்பைப் பொறுத்தவரை பதவியேற்க உள்ள நோர்வே புதிய அரசு வழமையான தனது நிலையையே மேற்கொள்வதாக அறிவித்திருக்கிறது.

நோர்வே அனுசரணையாளர்களை விரைவில் சந்திக்க உள்ளோம். அச்சந்திப்பின் போது எங்களுடைய அதிர்ச்சியையும், அதிருப்தியையும் தெரிவிக்க உள்ளோம். உண்மைத்துவத்தின் அடிப்படையில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து சர்வதேச சமூகம் நீதியான முடிவை மேற்கொள்ள வேண்டும் என்று நோர்வேத் தரப்பிடம் தெரிவிப்போம்.

சமாதான முன்னெடுப்புகளைத் தொடருவதாக இருந்தால் நடுநிலை மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில்தான் அது நடைபெறவேண்டும். இதில் தமிழ் மக்களும், தமிழீழ விடுதலைப்புலிகளும் உறுதியாக இருக்கிறார்கள்.

இந்த நம்பிக்கையைப் பாதிக்கும் வகையிலான அறிவிப்புகள் வருமானால், அவை சமாதான முன்னெடுப்புகளை நிரந்தரமாக முடக்கும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும் காலத்தில் எத்தனையோ சீண்டல்கள், இழப்புகள், குழப்பங்களை அரச தரப்பு ஏற்படுத்திய போதும் நாம் அர்ப்பணிப்போடு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தி வந்தோம்.

சுனாமி மீளமைப்புக்கான பொதுக் கட்டமைப்பு தொடர்பாக சர்வதேச சமூகத்தின் யோசனைகளுக்கு அமைய முழு ஈடுபாட்டுடன் பேச்சுக்களை நடத்தி இருக்கிறோம். இந்த அடிப்படையில் நியாயமான முடிவை ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்டால் தமிழ் மக்கள் வரவேற்பார்கள்.

அரசாங்கத்தின் அழுத்தம், பிரசாரங்களுக்குப் பணிந்து போன நிலையில் தற்காலிகமாகவே இம் முடிவை ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்டுள்ளது. இது இறுதியான முடிவு அல்ல. ஐரோப்பிய ஒன்றியத்தின் அனைத்து நாடுகளும் இணைந்து தீர்மானகரமாக நிலைப்பாடு எதுவும் எடுக்கவில்லை. தடை தொடர்பாக ஆலோசிப்பதாகவே அவர்களது சொற்பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

எங்களுடைய நீதியான, நியாயமான நிலைப்பாடுகளை விளக்குவதற்காக ஐரோப்பிய நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளோம்.

எங்களுடைய கருத்துகளை பல்வேறு வழிமுறைகளூடாக அவர்களுக்குத் தெரியப்படுத்துவோம். சர்வதேச சமூகமானது ஒருதலைப்பட்சமாக தொடர்ந்து இத்தகைய முடிவுகளை மேற்கொண்டால், தமிழீழ விடுதலைப்புலிகளும் துர்ப்பாக்கியமான, இக்கட்டான நிலையில் முடிவுகளை எடுக்க நேரிடும் என்று மேலும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

வணிக முகாமைத்துவ பட்டப்படிப்புகள் கல்லூரி
D.C.M.
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புகள்
B.COM PART I, B.A. PART I
B.COM PART II, B.COM FINAL
ஆரம்பம்:- 01-10-2005
சனி 7.00(ப.நேரம்)
S. வரதராஜன்
இயக்குநர்
(C/4670)

இப்பத்திரிகை இல.267 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.09.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.